விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 04 வெள்ளிக்கிழமை (16.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

# யாழ்.மாநகர சபையில் கூட்டமைப்பு ஆட்சி

## ஈ.பி.டி.பி; ஐ.தே.கட்சி நிபந்தனையற்ற ஆதரவு

**(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.**

வடக்கு கிழக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பலத்தை பெறவில்லை. இதனால் தொங்கு நிலையில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பிறகட்சிகளின் ஆதரவுடனேயே நிர்வாகத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, உள்ளூராட்சி நிர்வாகத்தை பலப்படுத்த வேண்டும் என்ற கருத்து, சிவில் சமூகத்தினால் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சூழலில், யாழ்ப்பாண மாநகர சபையில், அதிகபட்சமாக ஆசனங்களை வென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, வெளியில் இருந்து நிபந்தனையற்ற ஆதரவை வழங்க ஈ.பி.டி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முன்வந்துள்ளதாக தெரியவருகின்றது.

பெரும்பான்மை பலம் இல்லாத உள்ளூராட்சி சபைகளில், அதிக ஆசனங்களைப் பெற்ற 23

# வடக்கில் 3 ஆண்டுகளில் 62 பேரை காணவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழு புள்ளி விபரத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த 3 ஆண்டுகளில் காணாமல் போனோர் தொடர்பாக 62 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புள்ளிவிபரத் தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வடக்கு மாகா 23

# ரணில் பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டாம் - மகிந்த

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவி விலக வேண்டாமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்ததாக அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். 24

# அரசியல் நிலைமையை ஆராய மைத்திரி - மகிந்தவுக்கு அழைப்பு


(கொழும்பு)

அரசியல் நிலைமை தொடர்பில் கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அழைப்பு விடுத்ததாகவும், நாட்டிலுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை முடிவடைந்ததன் பின்னர் ஜனாதிபதியை சந்திப்பதாக தான் பதிலளித்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் ஒன்று கூடிய போது மகிந்த ராஜபக்ஷ இந்த அறிவித்தலை அவர்களிடம் குறிப் 23

வவுனியா - தேக்கவத்தை பகுதியில்

# கஞ்சா, ஹெரோயினுடன் மூவர் பொலிஸாரால் கைது



(முல்லைத்தீவு)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 0.4 கிலோ கேரளாக் கஞ்சாவையும் 23

# நல்லாட்சி அரசை பாதுகாக்க அமெரிக்கா, இந்தியா முயற்சி

## மகிந்த அணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பாதுகாக்கின்ற முயற்சிகளில் இந்தியாவும் அமெரிக்காவும் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே கூட்டு எதிரணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பேச்சாளரான டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் 23

# வவு.நகர சபையின் தலைவராக சேனாதிராஜா தெரிவு

(வவுனியா)

வவுனியா நகர சபையின் தலைவராக முதல் இரண்டு வருடங்களுக்கு நாகலிங்கம் சேனாதிராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் இடம்பெற்ற கட்சித் 23

# பொறுப்புக்கூறும் வயது 12ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூறுவதற்கான வயதெல்லையை 12 வயதாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள 23

# தொழுநோயாளர்களும் தேர்தலில் வாக்களிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் தொழுநோயாளர்களுக்கும் வாக்களிக்கும் வாய்ப்பு ஏற்பாடு 23

# ஜனாதிபதி இன்று விசேட அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அறிவிப்பு ஒன்றினை இன்று 23

# த.தே.கூவின் மன்னார் கூட்டத்தில் சலசலப்பு

## நகரசபை தலைவராக ஜெராட் தெரிவு

(மன்னார்)



நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியின் கீழ் உள்ள 23

# பாராளுமன்ற தேர்தலை உடன் நடத்துமாறு கோருவது தவறு

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

ஒரு தேர்தலில் மக்கள் ஆணை கிடைத்ததன் பின்னர், அதேபோன்று இன்னுமொரு தேர்தலில் தான் அந்த மக்கள் ஆணையை மாற்ற முடியும் எனவும் ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் அந்த ஆணையை மாற்றுமாறு கோருவது தவறானது எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் 23

# தமிழ் மக்களின் தனித்துவத்தை அடகு வைத்தால் கூட்டமைப்புக்கு எதிர்காலத்தில் தோல்வியே

## சிவில் சமூக அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு அப்பால் சென்று நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் இருப்பையும் தனித்துவத்தையும் அடகு வைத்து ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்குமாக இருந்தால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இதைவிடப் பெரிய தோல்வியையே சந்திக்க நேரிடும் என்று சிவில் சமூக அமைப்பு அறிக்கை மூலம் எச்சரித்துள்ளது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்பது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

# இந்திய மீனவர்கள் 109 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் 109 பேரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அந்த வகையில் ஊர்காவ 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கத் தயாராக உள்ளோம்

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியமைக்கத் தயார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் இலங்கை அரசியலில் எதிர்பாராத மாற்றங்களை தோற்றுவித்து வரும் நிலையில், அரசியல் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு பிரதான கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்கும் பலம் இல்லாததால் சிறு கட்சிகளின் ஆதரவை குறிவைத்துள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே சுதந்திரக் கட்சி இத்தகவலை குறிப்பிட்டுள்ளது.

தனித்து ஆட்சியமைக்கும் யோசனையை ஐ.தே.க முன்வைத்ததைத் தொடர்ந்து, அதனைத் தகர்த்தெறிந்து ஏனைய கட்சிகள் ஆட்சியமைக்க முனைவதோடு, பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துமாறும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கும் ஒருவரை பிரதமராக நியமித்து ஆட்சியமைக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு நிபந்தனைகளுடனான ஆதரவை வழங்கும் நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுனவும் உள்ளதோடு, கட்சி மட்டத்தில் அதுகுறித்து ஆராய்ந்து வருகின்றது.

அத்தோடு, இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் தொடர்ந்து பல்வேறு கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறாயினும், இரு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டரசாங்கத்தை தொடர்ந்து கொண்டுசெல்ல வேண்டும் என்பதே பெரும்பான்மையானவர்களின் கருத்தாக உள்ளது. (ம)




நன்றி மறவாமை...

கிருஷ்ணமூர்த்தி ஜெயானந்தன்



உள்ளூராட்சி தேர்தலில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் **அங்கஜன் இராமநாதன்** தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டஎனக்கும், கணிசமான வாக்களித்து பெருமை சேர்த்த பருத்தித்துறை 07ஆம் வட்டாரத்தின் துன்னாலை வடக்கு J/417, வல்லிபுரம்-திருமால்புரம் J/416, மந்திகை J/415, புலோலி தெற்கு J/414 ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் அன்பு கலந்த நன்றிகள்.

கௌரவ அங்கஜன் இராமநாதன் தலைமையில் எமது கிராமங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

-என்றென்றும் நன்றியுடன் **கி.ஜெயானந்தன்**

(2801)



**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | K.K.S வீதி, சுன்னாகம்

(இரு இடத்திலும்)

**A/L தமிழ் Day Class**

வருடா வருடம் அதிகூடிய மாணவர்களை யாழ்.மாவட்டத்தில் "A" சித்தி பெற வைத்த தமிழ் பேராசான்

**திரு. N. சத்தியவேந்தன்**

(B.A (Hons) M.Phil-Tamil)

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி

| | |
|---|---|
| யாழ். நகரில் | 9.00 A.M |
| சுன்னாகத்தில் | 10.30 A.M |

A/L 2020, 2019, 2018 பிரிவுகளும் நடைபெறுகின்றன

(ஜ-1612)



**காணி 5 வருட குத்தகைக்கு**

461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆரிய குளச் சந்திக்கு அருகாமையில், புகையிரத நிலைய த்திற்கு பின்புறமாக) அமைந்துள்ள 8 பரப்பு 1.7 குளி காணியும், கட்டடமும் 5 வருட குத்தகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

**0750412552**

(2806)



**SB Travels and Tours (Pvt) Ltd**

நம்பமுடியாத விலைக்கழிவில் சென்னைக்கு சென்று வருவதற்கு 18,000/= இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இடைத் தரகர்கள் தேவையில்லை

ஒருமுறை எங்கள் நிறுவனத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள்.

| கொழும்பு-15 | கொழும்பு-13 | கொழும்பு-06 |
|---|---|---|
| 0112540111 | 0112333322 | 0112058625 |
| Jaffna 0212228555 | Jaffna 0212227666 | Hotline 0771083480/1 |



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



# கண்ணீர் அஞ்சலி

சிவஸ்ரீ

**கணேசராஜக்குருக்கள் குகதாஸக்குருக்கள்**



அமரர் சிவஸ்ரீ கணேசராஜக்குருக்கள் குகதாஸக்குருக்கள் அவர்களின் பிரிவுத்துயரில் இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பிறப்பு 14.08.1943 | இறப்பு 14.02.2018

தர்மகர்த்தா சபை

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

(2807)



# கண்ணீர் அஞ்சலி

ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில் முன்னாள் பிரதமகுரு

**சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள்**



அவர்கள் 14.02.2018 புதன்கிழமை அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபை

ஈழத்து தில்லையம்பதி

ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

(2804)



# வேலைவாய்ப்பு!

## ➢ காசாளர் (CASHIER)

- இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்.

## ➢ கணக்கு உதவியாளர் (ACCOUNT ASSISTANT)

- (HNDA/AAT/வேறு தகமைகள்) இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்.

## ➢ அலுவலக உதவியாளர் (OFFICE ASSISTANT)

(Ms-Office, O/L ஆங்கிலம் சித்தி, A/L Pass)

## ➢ களஞ்சிய காப்பாளர் (ஆண்) (STORE KEEPER)

- இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். (Hardware-இரும்புப் பொருட்கள்)
- கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்.

(2802)

- 20 - 40 வயதுடையவராக இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சனிக்கிழமை (17.02.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA DIGITAL IMAGE

379, Kasthuriyar Road, Jaffna.

0772607614 | 0777481696

# "தமிழ் மக்களுடைய தனிப்பட்ட பிரச்சினையல்ல"
# காணாமற் போனோர் பிரச்சினை
# மூவின மக்களின் பிரச்சினை!
## அனைவரும் இதை உணர வேண்டுமென பிரிட்டோ வலியுறுத்து



(கொழும்பு)

காணாமற்போனோர் பிரச்சினையானது வெறுமனே தமிழ் மக்களுடைய தனிப்பட்ட பிரச்சினை என்ற கண்ணோட்டம் காணப்படுகிறது. ஆனால் வடக்கு, கிழக்கு, தெற்கு என சகல பிரதேசங்களிலும் இப்பிரச்சினை காணப்படுவதோடு இது மூவின மக்களின் பிரச்சினை என்பதை அனைவரும் உணர வேண்டுமென காணாமற்போனோரின் குடும்பங்களது அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார். காணாமல் போனோர் பிரச்சினை குறித்து பேசினால் இராணுவத்தினர் பாதிக்கப்படுவர் என தெற்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த மற்றும் அவரைச் சார்ந்தோர் கருதும் மனப்பாங்கும் மாற்றப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பில் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில், உறவுகளை இழந்து தவிப்பவர்கள் வீதிகளில் போராடிவருகின்றனர். நேற்று முன்தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட காதலர் தினத்தில், இம்மக்கள் தமது உறவுகளுடனான நினைவுகளுடன் இத்தினத்தை அனுஷ்டித் தனர். இதற்கான ஏற்பாட்டை காணாமற் போனோரது உறவினர்களின் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இது தொடர்பாக பிரிட்டோ மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய தேர்தல் முடிவுகளை வைத்து நோக்கும் போது, காணாமற்போனோரின் பிரச்சினையின் பாரதூரம் வெளிப்படுத்தப்பட்டது.

உறவுகளை இழந்து தவிப்பவர்களுடைய வேதனையை ஏனையோர் புரிந்து கொள்ள முடியாமல் இருந்த நிலையில், நேற்று முன்தினம் தெற்கின் இளைஞர்கள் பலரும் இந்நிகழ்வுக்கு வந்ததாகவும் அங்கு ஒலிபரப்பப்பட்ட பாடல் மற்றும் பகிர்ந்து கொண்ட விடயங்கள் என்பன அதனை உணர வைத்ததாகவும் பிரிட்டோ தெரிவித்தார்.

காணாமற்போனோர் பிரச்சினைக்கு அரசாங்கம் முன்னெடுக்கும் நகர்வுகள் போதுமானதாக இல்லையென உறவினர்கள் குறிப்பிடுவதாக சுட்டிக்காட்டிய பிரிட்டோ, இராணுவத்தினர் தொடர்பில் காட்டப்படும் கரிசனை காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் காட்டப்படுவதில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இந் நிலைமையை மாற்ற முடியாவிட்டால் இரு விடயங்களிலும் குறைந்த பட்சம் சம நிலையாவது பேண வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிலையில், தமது அன்புக்குரியவர்களுக்கு தமது அன்பை வெளிப்படுத்த முடியாமல் இருந்த உறவினர்களுக்கு அதற்கான சந்தர்ப்பமாகவே நேற்று முன்தினம் குறித்த நிகழ்வு அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிலைமாறு கால நீதிப் பொறிமுறை தொடர்பாக பிரபல விடுதிகளில் நாள்தோறும் கூட டங்களை கூட்டுபவர்கள், காணாமல் போனோரது பிரச்சினையின் தாக்கத்தை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென பிரிட்டோ மேலும் வலியுறுத்தினார். (இ-7)

## எட்டுப்பேர் உயிரிழப்பு
# இடிந்து விழுந்த கிராண்ட்பாஸ் கட்டட உரிமையாளர் நேற்று பொலிஸில் சரண்

(கொழும்பு)

கிராண்ட்பாஸில் நேற்று முன்தினம் இடிந்து விழுந்த கட்டடத்தின் உரிமையாளர் நேற்று பொலிஸில் சரணடைந்தார்.

கிராண்ட்பாஸில் இயங்கி வந்த பழைமையான நிறுவனம் ஒன்றின் கட்டடத்தின் ஒரு பகுதி நேற்று முன்தினம் திடீரென இடிந்து விழுந்தது. இதில், அங்கு இயங்கி வந்ததாகச் சொல்லப்படும் தொழிற்சாலையின் ஊழியர்கள் 8 பேர் உயிரிழந்தனர்.

மேலும் சிலர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே கட்டடத்தின் உரிமையாளர் நேற்று பொலிஸில் சரணடைந்தார்.

இவர் வெளிநாட்டில் வசித்து வந்தார் என்றும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-7)

## "கூட்டணி அரசு தொடரும்"
# அமைச்சர் கபீர் திட்டவட்டம்



(கொழும்பு)

மக்கள் அளித்த தீர்ப்புக்கு அமைய கூட்டணி அரசைத் தொடர முடிவு செய்திருப்பதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் கபீர் ஹாஷீம் தெரிவித்தார். அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஐ.தே.க. சந்திப்பில் கலந்து கொண்டுவிட்டு வெளியேறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசுக்கு பாராளுமன்றில் பெரும்பான்மை இல்லை என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியன இணைந்து அரசமைக்கவுள்ளதாகவும் வெளியான செய்திகள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த கபீர் ஹாஷீம், கூட்டணி அரசைத் தொடர்வதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றும் அரசிடமே இன்னும் பெரும்பான்மை இருப்பதாகவும் அது இல்லையென்றால் இல்லை என்று கூறுபவர்களை அதை நிரூபிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அரசினது கொள்கைகளுக்கு அமையவும் கட்சியின் கொள்கைகளுக்குப் பங்கம் வராத வகையிலும் புதிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கூட்டரசாங்கத்திற்கான சாத்தியம் மிகக் குறைவு
## அசாத் சாலி தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த கூட்டரசாங்கத்திற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளதென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, எதிர்கால அரசியல் நிலைவரம் தொடர்பாக இன்றைய தினம் முக்கிய அறிவிப்பொன்று வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் கூட்டரசாங்கத்தை ஆட்டம் காண வைத்துள்ள நிலையில், தனித்து ஆட்சியமைக்கும் முனைப்பில் இரு கட்சிகளும் தீவிரம் காட்டி வருகின்றன. இந்நிலையிலேயே அசாத் சாலி மேற்குறித்த கருத்தை முன்வைத்துள்ளார். (இ-7)

# தொடர்ந்து வீழ்ச்சியடையும் இலங்கை ரூபாவின் மதிப்பு
## ஒரே நாளில் 60 சதம் சரிந்தது

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று முன்தினம் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 60 சதத்தினால் குறைந்து, 156.74 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி (மகிந்த அணி) வெற்றி பெற்றதை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களாலேயே பொருளாதார உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதியுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி அமெரிக்க டொலருக்கு எதிராக, இலங்கை ரூபாவின் மதிப்பு 4.29 ரூபாவினால், சரிந்துள்ளது. இது 2.81 வீத வீழ்ச்சியாகும். 2017 பெப்ரவரி 14ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு, 152.45 ரூபாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மென்டிஸ், ஷானக, திசரவின் ரொக்கெட் வேக துடுப்பாட்டத்தால்

# பங்களாதேஷை புரட்டியெடுத்தது இலங்கை

குசல் மென்டிஸ், டசுன் சானக, திசர பெரேரா வின் புயல் வேக துடுப்பாட்டம் கைகொடுக்க, பங்களாதேஷ் நிர்ணயித்த இமாலய வெற்றியிலக்கை (194) இலங்கை அணி ரொக்கெட் வேகத்தில் (16.4 ஓவர்) அடைந்து அசத்தல் வெற்றி பெற்றது.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

பங்களாதேஷ் அணியில் ஜகிர் ஹசன், அபிஃப் ஹொசைன், அரிபுல் ஹக்யூ, நஸ்முல் இஸ்லாம் ஆகிய நான்கு வீரர்களும் இலங்கை அணியில் மதுஷங்கவும் அறிமுகமானர்.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்காளதேசுக்கு ஜகிர் ஹசன், சௌமியா சர்கார் ஆகியோர் ஆரம்பம் வழங்கினர்.

ஜகிர் ஹசன் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். 2ஆவது விக்கெட்டுக்கு சௌமியா சர்கார் உடன் முஷ்பிகுர் ரஹிம் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 2ஆவது விக்கெட்டுக்காக 6.1 ஓவர்களில் 51 ஓட்டங்களைச் சேர்த்தது. சௌமியா சர்கார் 32 பந்துகளில் 6 பவுண்டரி, 2 சிக்ஸருடன் 51 ஓட்டங்கள் சேர்த்தார்.

அடுத்து வந்த அறிமுக வீரர் அபிஃப் ஹொசைன் பூச்சியத்தில் வெளியேற, 4-வது விக்கெட்டுக்கு முஷ்பிகுர் ரஹிமுடன் மகமுதுல்லா இணை சேர்ந்தார்.

முஷ்பிகுர் ரஹிம் அரை சதம் அடிக்க, மகமுதுல்லா 31 பந்தில் 43 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சபீர் ரஹ்மான் ஒரு ஓட்டத்தில் வெளியேற, முஷ்பிகுர் ரஹிம் 44 பந்துகளில் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 66 ஓட்டங்கள் சேர்க்க,

20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் 5 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைக் குவித்தது.

இது பங்களாதேஷின் ரி20 வரலாற்றில் எடுக்கப்பட்ட அதிகபட்ச மொத்த ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்கு முன் 190 ஓட்டங்களை எடுத்ததே அதிகமாக இருந்தது.

194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன இலங்கை களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக களம் இறங்கிய குசல் மென்டிஸ், குணதிலக ஆகியோர் ருத்ர தாண்டவம் ஆடினர். குணதிலக 15 பந்துகளில் 30, குசல் மெண்டிஸ் 27 பந்துகளில் 53 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இருவரும் இணைந்து ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டமாக 42 பந்துகளில் 83 ஓட்டங்கள் குவித்தனர்.

அதன்பின் வந்த தரங்க 4, டிக்வெல 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக ஷானகவுடன் திசர பெரேரா ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை சராசரியாக ஓவருக்கு 10 ஓட்டங்களுக்கு மேல் இருந்து கொண்டே வந்தது.

இறுதியில் இலங்கை அணி 16.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (194) 6 விக்கெட்டுக்களால் அடைந்தது.

களத்தில் தசுன் ஷானக 24 பந்துகளில் 3 பவுண்டரி, 3 சிக்ஸருடன் 42, பெரேரா 18 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸருடன் 39 ஓட்டங்களுடன் இருந்தனர்.



போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் குசல் மென்டிஸ் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இலங்கை 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி போட்டி 18ஆம் திகதி நடக்கிறது.

# ரொனால்டோ 100



சம்பியன்ஸ் லீக் கால்பந்து 'ரவுண்ட் 16' போட்டியில், ரொனால்டோ 2 கோல் அடித்து கைகொடுக்க, ரியல் மட்ரிட் அணி, 3-1 என்ற கோல்கள் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியை வீழ்த்தியது.

ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில் நடந்த ஐரோப்பிய கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் தொடருக்கான 'ரவுண்ட் 16' சுற்றின், முதல் போட்டியில், ரியல் மட்ரிட் (ஸ்பெயின்), பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன (பிரான்ஸ்) அணிகள் மோதின.

ஆட்டத்தின் 33ஆவது நிமிடத்தில் பாரிஸ் அணியின் ராபியாட், முதல் கோல் அடித்தார். இதற்கு, 45ஆவது நிமிடத்தில் கிடைத்த '[illegible]' வாய்ப்பில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் மீண்டும் அசத்திய ரியல் மட்ரிட் அணிக்கு ரொனால்டோ (83ஆவது நிமிடம்), மார்சிலோ (86ஆவது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். கடைசி நிமிடம் வரை போராடிய பாரிஸ் அணியினரால் கூடுதலாக ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில், ரியல் மட்ரிட் அணி, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இவ்விரு அணிகள் மோதும் 'ரவுண்ட் 16' சுற்றின், 2ஆவது போட்டி வரும் மார்ச் 6இல் நடக்கவுள்ளது.

ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் கோலடித்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, சம்பியன்ஸ் லீக் கால்பந்து வரலாற்றில், ரியல் மட்ரிட் அணிக்காக தனது 100ஆவது கோல் அடித்தார். இதுவரை இவர் 95 போட்டியில் 101 கோல் அடித்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் கால்பந்து அரங்கில், அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார். இவர், மன்செஸ்டர் யுனைடெட் (இங்கிலாந்து), ரியல் மட்ரிட் அணிகளுக்காக 147 போட்டிகளில், 116 கோல் அடித்துள்ளார். இரண்டாவது இடத்தில் பார்சிலோனா அணிக்காக விளையாடும் ஆர்ஜென்டினா வீரர் மெஸ்சி (97 கோல், 121 போட்டி) உள்ளார்.

100

# சென்சூரியனிலும் தூள் கிளப்புமா இந்தியா?

## தென்னாபிரிக்காவுடன் இன்று இறுதி மோதல்

இந்திய - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 6ஆவது ஒரு நாள் போட்டி செஞ்சூரியனில் இன்று நடக்கிறது.



இதிலும் இந்தியா தனது அசத்தல் ஆட்டத்தை வெளிபடுத்தும் பட்சத்தில் 5-1 என்ற கணக்கில் கிண்ணம் வெல்லாம்.

தென்னாபிரிக்காவுக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் ஐந்து போட்டிகளின் முடிவில் இந்திய அணி, 4-1 என, ஏற்கெனவே தொடரை கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் ஆறாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் இன்று நடக்கிறது.

### ரோகித் எழுச்சி

தென்னாபிரிக்க மண்ணில் முதன்முறையாக ஒரு நாள் தொடரை கைப்பற்றி, புதிய வரலாறு படைத்த உற்சாகத்தில் உள்ள இந்திய அணி, ஐ.சி.சி., தரவரிசையிலும் 'நம்பர்-1' இடத்தை கைப்பற்றியது. முதல் நான்கு போட்டிகளில் ஏமாற்றிய ரோகித் சர்மா, 5ஆவது போட்டியில் சதம் கடந்து எழுச்சி கண்டது வரவேற்கத்தக்கது. ஷிகர் தவான் (305 ஓட்.), மீண்டும் நல்ல ஆரம்பம் கொடுக்கலாம்.

இதுவரை 2 சதம், ஒரு அரைச்சதம் என, 429 ஓட்டங்கள் குவித்துள்ள அணித் தலைவர் விராட் ஹோலி தனது ஓட்ட வேட்டையைத் தொடரலாம்.

### நடுத்தர வரிசை ஏமாற்றம்

இந்திய அணியின் நடுத்தரவரிசைதான் கவலை அளிக்கிறது. கடந்த 5 போட்டிகளில், இதுவரை யாரும் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை. ஜொகனஸ்பேர்க்கில் நடந்த 4ஆவது போட்டியில், தோனி (42 ஓட்.) ஓரளவு ஆறுதல் கொடுத்தார். பெரிய அளவில் சோபிக்காத அஜின்கியா ரகானே (106 ஓட்.), ஸ்ரேயாஸ் ஐயர் (48), ஹர்திக் பாண்ட்யா (26) எழுச்சி காண வேண்டும். இத்தொடரில் இதுவரை ஒரு போட்டியில் கூட விளையாடாத மணிஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக் ஆகியோருக்கு நடுத்தரவரிசையில் வாய்ப்பு வழங்கப்படலாம்.

### ஷமி வாய்ப்பு

ஏற்கெனவே தொடரை வென்றதால், தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்று வரும் வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமார் (19 ஒருநாள், 6 'ரி20', 2 டெஸ்ட்), பும்ரா (20 ஒருநாள், 8 'ரி20', 3 டெஸ்ட்) ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்படலாம். மொஹமட் ஷமி, ஷர்துல் தாகூர் உள்ளிட்ட 'வேகங்கள்' சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது. 'சுழலில்' குல்தீப் யாதவ் (16 விக்கெட்), யுவேந்திர சகால் (14) கூட்டணி, மீண்டும் விக்கெட் வேட்டை நடத்தலாம். துடுப்பாட்டம், பந்துவீச்சில் இந்திய அணியினர் முழுத்திறமையை வெளிப்படுத்தினால், 5-1 என்ற கணக்கில் கிண்ணம் வென்று, தொடரை வெற்றியுடன் முடிக்கலாம்.

### ஆறுதல் வெற்றி

சொந்த மண்ணில் ஒருநாள் தொடரை இழந்த சோகத்தில் உள்ள தென்னாபிரிக்க அணிக்கு, வழமையான அணித் தலைவர் டு பிளசி, குயின்ரன் டி ஹொக் ஆகியோர் காயத்தால் விலகியது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

இன்று ஆறுதல் வெற்றி பெற, அணித் தலைவர் மார்க்ரம், அம்லா ஜோடி நல்ல தொடக்கம் கொடுக்க வேண்டும். டி வில்லியர்ஸ், டேவிட் மில்லர், கிளாசன், டுமினி உள்ளிட்டோர் அதிரடி காட்டினால் நல்ல ஓட்ட எண்ணிக்கையை பெறலாம்.

வேகப்பந்துவீச்சில் நிகிடி (6 விக்கெட்), ரபாடா (5) ஆறுதல் கொடுக்கின்றனர். பெலுக்வாயோ (3), மோர்னே மார்கல (2), கிறிஸ் மோரிஸ (2) எழுச்சி காண வேண்டும். 'சுழலில்' இம்ரான் தாகிர் சேர்க்கப்படலாம். ஷாம்சி, டுமினி கைகொடுத்தால் நல்லது. அடுத்து அவுஸ்திரேலிய தொடர் இருப்பதால், ஒரு சில முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மழை வருமா?

செஞ்சூரியனில் இன்றைய வெப்பநிலை, அதிகபட்சம் 26, குறைந்தபட்சம் 17 டிகிரி செல்சியசாக இருக்கும். மழை வர, பகல் நேரத்தில் 40, இரவு நேரத்தில் 66 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும் மைதானத்தில் மழை நீரை வெளியேற்றும் வசதி நன்றாக இருப்பதால் போட்டிக்கு எவ்வித பாதிப்பும் இருக்க வாய்ப்பு இல்லை.

### ஆடுகளம் எப்படி?

செஞ்சூரியன், சுப்பர்ஸ் போர்ட் பார்க் மைதான ஆடுகளம், துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருக்கும் எனத் தெரிகிறது. வேகப் பந்து வீச்சாளர்கள் சாதிக்க கடுமையாக போராட வேண்டும்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய முதல்வர் கா.இரவீந்திரராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் சி.முரளிதரன், சிறப்பு விருந்தினராக தேனு களஞ்சிய உரிமையாளர் தி.மோகனராஸ், கௌரவ விருந்தினராக இலங்கை செஞ்சிலுவை சங்கத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் கலந்து கொள்வர். (ம)

# எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை!

## ஜே.வி.பி.அறிவிப்பு



(கொழும்பு)

கூட்டு அரசாங்கம் அமைக்க எந்தக் கட்சிக்கும் ஆதரவு வழங்கப்படமாட்டாது என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்கள் எதிர் பார்த்த அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற, தமது கட்சியை வலுப்படுத்துவதன் மூலமே முடியும் எனவும் அவர் தெரிவித்தார். தமது கட்சிக்கு 8 இலட்சத்து 15 ஆயிரம் மக்கள் வாக்களித்துள்ளனர்.

அவர்களின் கருத்திற்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அதன்படி, கூட்டு அரசாங்கம் அமைக்க எந்தக் கட்சிக்கும் ஆதரவு வழங்க முடியாது.

அதுபோல், நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகளின் முடிவுகளின்படி, ஜனாதிபதிக்கு தனித்தோ பிரதமருக்கு தனித்தோ அல்லது இருவரும் இணைந்தோ ஆட்சியைக் கொண்டுச் செல்ல எந்தத் தகுதியும் இல்லை என்று மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் ஜனவரி 8ஆம் திகதியின்படி மக்களின் அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்ல ஜே.வி.பி. சார்ந்த கட்சிக்கும் மக்கள் இயக்கத்திற்கும் மாத்திரமே முடியும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசிய அரசு தொடரும் அமைச்சர் ராஜித உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கம் தொடருமென அமைச்சரவை இணைப் பேச்சாள ரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு, அரசாங்கத்தின் எதிர்கால அரசியல் பயணத்தைக் கருத்திற்கொண்டு அமைச்சரவையில் மாற்றம் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த மாற்றம் இவ்வாரம் இடம்பெற வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது குறித்து பல கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ராஜித இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# அமைச்சர் சாகல இராஜினாமா?



(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க தனது அமைச்சுப் பதவியில் தொடர்ந்து இருப்பதற்கு விரும்பவில்லையென அறிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற ஐ.தே.க. உறுப்பினர்களுடைய கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**ரவீந்திரன் கரிசினி**



பிறப்பு 17.01.1994

இறப்பு 04.01.2018

பாசமிகு உன் செயல்கள்
பாதியிலே மறையவில்லை
பசுமையான நினைவுகளாய் எமைத்
தொடுகின்றன
நீ மறைந்து போனாலும் உன்
நினைவுகள் மறைந்து போகாது

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 17.02.2018 நாளை சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

நாதன் திட்டம், புன்னை நீராவி, விசுவமடு.

அப்பா (ரவி), அம்மா, சகோதரர்கள், பெரியப்பா(ராஜா), பெரியம்மா.

(2660)


## இராசி பலன்

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ்கூடும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், மனக்கிலேசமுண்டு.

**சிம்மம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சிவாயநம என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** வியாபார விரோதம் விலகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், தொலைபேசி [illegible]யில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி, சுக், புத, சந் | இராசி பலன் | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு செவ் | | |

சந்திராஷ்டமம்: மகம்

**16.02.2018**

மாசி 04, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு

பிரதமை பின்னிரவு 4.12 மணிவரை

அவிட்டம் முற்பகல் 10.13 மணிவரை

சுபநேரம் 6.33-8.03 மணிவரை

இராகுகாலம் 11.03-12.33 மணிவரை

வளவன்

# நியமனம் இடைநிறுத்தம்; கண்டித்து ஆசிரியர்கள் நேற்றுப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தொண்டராசிரியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களாக பணியாற்றியவர்களின் ஒரு தொகுதியினருடைய நியமனங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையைக் கண்டித்து வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலக முன்றலில் மேற்குறித்த ஆசிரியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண தொண்டர் ஆசிரியர்களாக 2009 ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் சுமார் பத்தாண்டு காலம் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 182 பேருக்கும், அதற்கு சமமான காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 142 ஆசிரியர்களுக்கும் நேற்று அலரி மாளிகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3.2 க்குரிய நியமனக் கடிதம் வழங்குவதாக ஆளுநரால் அறிவிக்கப்பட்டது.

இந்த நியமனங்களுக்குள் உள்வாங்கப்படாத ஏனைய தொண்டர் ஆசியர்கள் அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்து இந்த தரத்தில் தாம் 676 பேர் இருப்பதாகவும் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு நியமனம் வழங்கக்கூடாது எனவும் அனைவருக்கும் ஒரே நேரத்தில் நியமனங்களை வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர். இந்த விடயம் குறித்து முதலமைச்சர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சுக்கு அறிவித்திருந்தார்.

அந்த வகையில் அனைவருக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சு மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு வழங்கவிருந்த நியமனம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

மேற்குறித்த நியமனம் இடைநிறுத்தப்பட்டதை கண்டித்தும் தமக்கு உடனடியாக நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி நேற்று முதலமைச்சர் அலுவலக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (இ-9)

## வதிவிட தேவைகளின் பொருட்டு காணிக் கொள்வனவிற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

காணிச் சீர்திருத்த சட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களிடம் இருந்து பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், வதிவிட தேவைகளின் பொருட்டும் காணிக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் சம்பத் சுபசிங்க ஆராட்சி தெரிவித்துள்ளார்.

காணிச் சீர்திருத்த சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் முதலீட்டாளர்களிடம் இருந்து பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், வதிவிட தேவைகளின் பொருட்டு உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட படிவங்கள் பத்தரமுல்ல கடுவல வீதி ,ல. 475 முகவரியில் அமைந்திருக்கும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்திலும் மாவட்ட காணி சீர்திருத்த அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி சீர்திருத்த அலுவலகங்களில்தொடர்பு கொண்டு பெற முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-9)



கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் 2018 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்: மகாலிங்கம்)

## நீதிமன்றத்தின் பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமைகோருபவர்கள் எவரேனும் இருப்பின் 2 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 431(2)இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப் படுகின்றது.

வழக்கு இல. B/206/14 சான்றுப் பொருள் இல. PR/153/14 சான்றுப் பொருள்விபரம் THABAM வர்க்க தண்ணீர் மோட்டார்-01, வழக்கு இல. BR/740/PC/17 MC/2330/PC/17, சான்றுப்பொருள் இல. PR/1139/17 சான்றுப் பொருள் விபரம் நீல நிற காஸ்சிலிண்டர்-01, வழக்கு இல. BR/1342/PC/16 MC/501/PC/17 சான்றுப் பொருள் இல. PR/156/17 சான்றுப் பொருள் விபரம் சம்சுன் வர்க்க HE 6293 HBB 00060 வெள்ளைநிற மடிக் கணனி-01, அதன் கேபிள் -01-மறு தவணை-23.04.2018.

வழக்கு இல. BR/1204/15 MC/2083/PC/16 சான்றுப்பொருள் இல. PR/87/17 சான்றுப் பொருள் விபரம் AR வர்க்க SNO-0904 இலக்க தண்ணீர் மோட்டார்-01, வழக்கு இல. BR/823/PC/17 MC/2528/PC/17 சான்றுப்பொருள் இல. PR/1257/17 சான்றுப்பொருள் விபரம் CS வர்க்க கறுப்பு நிற தலைக் கவசம்-01-மறுதவணை-06.04.2018

வழக்கு இல. BR/194/MT/17 MC/1228/MT/17 சான்றுப் பொருள் இல. PR/131/17 சான்றுப் பொருள் விபரம் EPTD 0974 இலக்க மோட்டார் சைக் கிள்-01-மறுதவணை-23.04. 2018.

வழக்கு இல. BR/462/PC/17 MC/1679/PC/17 சான்றுப்பொருள் இல. PR/643/17 சான்றுப் பொருள் விபரம் கறுப்பு நிற தலைக்கவசம்-01-மறு தவணை-24.04.2018.

வழக்கு இல. BR/14/F/17 MC/1415/F/17 சான்றுப் பொருள் இல. PR/17/17 சான்றுப் பொருள் விபரம் TPC CSS300 வர்க்க மரம் அரியும் வாள்-02, வெட்டுக்கத்தி-02, வழக்கு இல. BR/572/MT/16 MC/397/MT/17 சான்றுப்பொருள் இல. PR/154/16 சான்றுப் பொருள் விபரம் லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி-01, வழக்கு இல. AR/856/16 சான்றுப் பொருள் விபரம் தண்ணீர் மோட்டார்-01-மறுதவணை-23.04.2018. மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் கலந்து கொள்வார். (இ-10-136)

++++++++++++++++

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் ச.சத்தியரதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் , சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் , கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபரும் பழைய மாணவருமான வ.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம்ஆண்டுக.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினராகவடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-102)

## அந்தோனியார் ஆலய திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மண்டைக் கல்லாறு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் திருவிழாத் திருப்பலி இடம்பெற்று புனித அந்தோனியாரின் திருச் சொருப பவனியும் இடம்பெறும். (இ-10-107)

## குறிஞ்சிக் குமரிகள் நாவல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் அரியாலையூர் எஸ்.செல்வராஜனின் குறிஞ்சிக் குமரிகள் நாவல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

அரியாலை கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் மண்டபத்தில் கவிஞரும் ஆசிரியருமாகிய ஐ.குமரதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலனும், கௌரவ விருந்தினர்களாக திருமதி. மங்கையற்கரசி துரைராசா, திருமதி புஸ்பமணி நாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நூலின் அறிமுக உரையை கலாபூஷணம் ந.இராமநாதன் வழங்க வாழ்த்துரைகளை எழுத்தாளர் வே.தபேந்திரன், வெளிவிவகார அமைச்சின் ஓய்வுநிலைப் பணிப்பாளர் ஐ.தர்மகுலசிங்கம் ஆகியோரும் நூலின் வெளியீட்டுரையை கலாநிதி சு.குணேஸ்வரனும் வழங்குவர்.

முதற்பிரதியை பருத்தித்துறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் வ.இராஜலிங்கம் பெறுவார்.

நூல் மதிப்பீட்டுரையை வட மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கௌரி முகுந்தன் நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியர் கலாபூசணம் எஸ். புஸ்பராஜன் நிகழ்த்துவார். (இ-7)

## நோயாளியை பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து கடந்த 13.02.2018 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 65 வயது மதிக்கத்தக்க பொது நிறமுடைய ஆண் நோயாளர் இவ் வைத்தியசாலையின் விபத்து அதி. தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவர் சுய நினைவின்றி இருப்பதனால் இவர் பற்றிய விபரங்கள் எதுவும் பெற முடியாதுள்ளது. இதுவரை உறவினர்கள் எவரும்பார்வையிடுவதற்கு வருகை தரவும் இல்லை. எனவே உறவினர்கள் இவரை வந்து பார்த்துப் பொறுப்பேற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா அறிவித்துள்ளார். (இ)

## செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் க.பொ.த.(சா.த) பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேசிய அடையாள அட்டையுடன் பாடசாலைக்கு சமுகமளிக்கவும் என அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ)

# ஐ.தே.க.மறுசீரமைப்புக்கு இணக்கம்-தலைமை மாறுமா?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மறு சீரமைத்து அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் இந்த இணக் கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கட்சியை மறுசீரமைப்பதோடு, தற்போதைய அரசாங்கத்தின் குறைபாடுகளும் நிவர்த்திசெய்யப்பட்டு தேசிய அரசாங்கம் முன்னோக்கிக் கொண்டுசெல்லப்படுமென கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை மாற்றப்பட வேண்டுமென ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்தோடு, ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் ஏற்பதற்கு கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விருப்பம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கட்சிக்குள் அதிரடியான மாற்றங்கள் நிகழுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கட்சியின் தலைமையை மாற்றாமல் தனித்து ஆட்சியமைக்குமாறு ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்கள் அண்மையில் ரணிலிடம் தெரிவித்திருந்த நிலையில், கட்சி மறுசீரமைப்பு பணியின் போது பின்வரிசை உறுப்பினர்களுக்கு முக்கிய பதவிகள் பகிரப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)


உ
சிவமயம்

## சந்நிதியான் ஆச்சிரமம்

செல்வச்சந்நிதி தொண்டைமானாறு

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றையவை"

## மாணவர் கௌரவிப்பு விழா

(2017 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேசிய நிலையிலும் மாகாண மட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற வடக்கு மாகாண மாணவர்களுக்கானது).

காலம்: 17.02.2018 சனிக்கிழமை மு.ப. 09.00 மணி
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

பிரதம விருந்தினர் : ஸ்ரீமான் ஆ.நடராஜன்
(இந்திய துணைத் தூதுவர்-யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர் திரு செ.உதயகுமார்
(மாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்)

செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விருந்தினர்களும்-கௌரவம் பெறும் மாணவர்களும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நிகழ்ச்சி நிரல்

- ஆசியுரை
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
- வாழ்த்துரை
  சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்
  பிரம்மஸ்ரீ.ப.மனோகரக் குருக்கள் (பேரவைப் போஷகர்கள்)
- தலைமையுரை
  திரு.அ.குமாரவேல் ஆசிரியர் (விரிவுரையாளர்)
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர்கள் உரை
  (மாவட்டங்களின் வலயக்கல்விப் பணிப்பாளர்களும் கௌரவிப்புப் பெறும் மாணவர்களின் பாடசாலை முதல்வர்களும்)
- நடன நிகழ்வு : செல்வி.தி.ஜென்சிகா
  தகுதிகாண் மாணவர்களுக்குரிய கௌரவம் வழங்கல்
- நன்றியுரை: திரு ஆ.சிவநாதன் (அதிபர்)

(C-1619)

விளம்பர அனுசரணை: த.கணேசமூர்த்தி


## தனிநாயகம் அடிகளாரின் நினைவுப் பேருரை நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் தனிநாயகம் அடிகளாரின் நினைவுப் பேருரை-2 நாளை 17ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

## ரங்கே பண்டார இராஜினாமா

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சருமான பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் ஆனமடுவ தொகுதி அமைப்பாளர் பதிவியிலிருந்து நேற்று இராஜினாமா செய் துள்ளார்.

அரசாங்கத்தில் இடம்பெற்ற சிக்கல் நிலைமையயடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நலனுக்காக இந்த இராஜினாமா இடம்பெற்ற போதிலும் அவருக்கு அமைச்சுப்பதவியொன்று வழங்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


சிவமயம்



## உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

உசன்-மிருசுவில்

108 கலசாபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா

18.02.2018 ஞாயிற்றுக்கிழமை

"அருள்வாக்குச் சித்தர்"

குகஸ்ரீ இரத்தினகேதீஸ்வர சுவாமிகள்

(பிரதமகுரு, உசன் கந்தசுவாமி கோவில்)

தலைமையில் பல சிவாச்சாரியார்கள்

கலந்து சிறப்பிப்பார்கள்.

அன்றைய தினம் இல.769 வழித்தட இ.போ.ச வண்டி மற்றும் தனியார் சிற்றூர்தி வண்டி யாழ்ப்பாணம்-உசன்-யாழ்ப்பாணம் இடம்பெறும்.

அனுசரணை: கிருபா லேணர்ஸ்

(2786)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.நாகேஸ்வரன் கோவர்த்தனன்

(BSc,MSc, LLB)

அவர்கள் 15.02.2018 அன்று சட்டத்தரணியாக கொழும்பு உயர் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(2775)

"அட்சய பவனம்"
கல்வயல்,
சாவகச்சேரி.

பாராட்டுவோர்
சு.பிரதீபன் (மைத்துனன்)
மாமா, மாமி, மைத்துனிமார்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 14 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சவுதி<br>தொ.இ: B/8251 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8274 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/8254 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 16செவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/8278 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/8255 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8280 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 6 உயரம்: 6'<br>தகைமை/தொழில்:CIMA, BSc/கணக்காளர்<br>தொ.இ: B/8256 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/8283 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கனகராயன்குளம் கிராம அபிவிருத்தி சங்க காணியை பொலிஸாருக்கு வழங்க முஸ்தீபு

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

வவுனியா, கனகராயன் குளம் கிராம அபிவிருத்தி சங்க காணியை பொலி ஸாருக்கு வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டு வரும் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா வடக்கில் கனகராயன்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் நீண்ட காலமாக கனகராயன்குளம் பொலிஸார் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான காணியையும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியையும் கையகப்படுத்தி தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தார்கள்.

2013 ஆம் ஆண்டு பொலிஸாரின் சேவைக்கென பொதுமக்களின் மயானமாக பயன்படுத்தப்பட்டு வந்த பெரியகுளம் காணி வழங்கப்பட்டது. அதன் பின்பும் கனகராயன்குள பொலிஸா கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு சொந்தமான காணியையும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியையும் விட மறுத்து வந்தார்கள்.

குறித்த பிரச்சினை தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக பிரதேச மக்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு வருட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கனக ராயன்குள பொலிஸ் அதிகாரிகள் தாம் விடுவிப்பதாக கூறிவந்த போதிலும் அக்காணிகளை தம்வசமே தொடர்ச்சியாக வைத்திருந்து அக்காணிகளில் சில அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வந்துள்ளார்கள்.

கனகராயன்குள பொலிஸாரின் இச் செயற்பாட்டிற்கு பொதுமக்களால் கடும் விசனம் வெளியிடப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த வருட இறுதியில் புதிதாக மாற்றம் பெற்று வந்த வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சேமரத்தின விதான பத்திரன குறித்த காணி களை கனக ராயன்குள பொலிஸாருக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கை களை துரிதமாக மேற் கொண்டு வருகின்றார்.

கனகராயன்குளத்தில் பொதுத் தேவைகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கோ, வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கோ எந்த ஒரு பொதுக்காணியும் இல்லாத நிலையில் அரச அதிபரின் நடவடிக்கை பலத்த சந்தேகத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கிராம அபிவிருத்திக்கு சொந்தமானதும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியினையும் கனக ராயன் குளப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தி கனகராயன் குளப் பொதுத் தேவை களுக்கு அக்காணிகளை விடுவிக்குமாறு கோருவதுடன் தவறும் பட்சத்தில் சகல தமிழ்த் தரப்புக்களையும் பொது அமைப்புக்களையும் ஒன்றிணைத்து மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றினையும் மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இதனை சகல அரச அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற் கொண்டு வருவதுடன் இச் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-250-281)




# சமூக நலன்சார்ந்த வேலைகளுக்கு தண்டப்பண நிதி பயன்படுத்தப்படும்

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட கிராம மக்களின் பொது நலன் சார்ந்த அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துவதற்காக கடந்த 2016, 2017 ஆகிய ஆண்டுகளுக்குரிய தண்டப் பண நிதி வரவாக 3 கோடியே 27 இலட்சத்து 9 ஆயிரத்து 916 ரூபா 34 சதம் பணம் கிடைக்கப் பெற்றுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர நடராஜா ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களில் சிலர் சட்ட விரோத குற்றச் செயல்களில் ஈடுபடும் போது, அவர்களைப் பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தும் போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு நீதிபதியினால் தண்டப் பணம் விதிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அறவிடப்படும் தண்டப் பணத்தில் இருந்து ஒரு பகுதி பணத்தை அவர்கள் வாழும் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சமூக நலன் சார்ந்த வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது..

இவ்வாறு கிடைக்கப் பெறும் நிதி புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் நிதியுடன் சேர்க்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள பொது மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகின்றோம்.

இதற்கமைய கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான வரவாக ஒரு கோடியே 49 இலட்சத்து 19 ஆயிரத்து 302 ரூபா 45 சதம் பணம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்நிலையில், கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்17 இலட்சத்து 57 ஆயிரத்து 966 ரூபா 77 சதமும் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 இலட்சத்து 41 ஆயிரத்து 10, சதமும், பெப்ரவரி மாதம்16, இலட்சத்து 90, ஆயிரத்து 333 ரூபா 35 சதமும், மார்ச் மாதம் 17 இலட்சத்து 81 ஆயிரத்து 666 ரூபா68 சதமும் ஏப்ரல் மாதம் 12 இலட்சத்து 38 ஆயிரத்து 291 ரூபா 61 சதமும் மே மாதம் 15 இலட்சத்து65 ஆயிரத்து 750 ரூபா 02 சதமும், ஜூன் மாதம் 20 இலட்சத்து ஆயிரத்து 746 ரூபா 09 சதமும் ஜூலை மாதம் 17 இலட்சத்து 14 ஆயிரத்து 358 ரூபா 29 சதமும் ஒகஸ்ட் மாதம்18 இலட்சத்து 69 ஆயிரத்து 770ரூபா 93 சதமுமாக 09, மாதங்களிற்கான வரவாக ஒரு கோடியே 53, இலட் சத்து 60 ஆயிரத்து 613 ரூபா 89 சத நிதி நீதிமன்ற தண்டப் பண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரப் பட்டியல் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மிகவிரைவில் இதற்குரிய பணம் கிடைக்கப் பெற்றுவிடும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.(2-15)

# போக்குவரத்து வசதியின்றி பாடசாலைக்கு தினமும் நடந்து சென்று வருகின்றோம்

## சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்தும் விபோசனம் கிடைக்கவில்லை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் கிராமத்திலிருந்து தினமும் 24 கிலோமீற்றர் கால்நடையாக பாடசாலைக்குச் சென்று வரும் தமக்கு இதுவரை எந்தவித போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க எவரும் முன்வருவதாக இல்லையென பாதிக்கப்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இப்பகுதி மாணவர்களின் பெற்றோர்கள்: மேற்படி கிராமத்தில் வாழும் தாங்கள் அன்றாடம் கூலி வேலை செய்யும் குடும்பங்களாகவும் சில குடும்பங்கள் வவுனிக்குளத்தில் நன்னீர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டும் வருகின்றன. இந்த கிராமத்தில் இருந்து தினமும் 85 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காலையில் 12 கிலோமீற்றர் கால் நடையாக வன்னி விளாங்குளம் பாடசாலைக்கும் பாடசாலை முடித்து வீட்டிற்கும் திரும்பி வருகின்றனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தருமறு கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் எல்லோரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.இது தொடர்பில் பல கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம். இன்றுவரை அதற்கு எந்த விதமான தீர்வுகளும் இல்லை.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் எங்கள் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு பேருந்தை இரண்டு நாட்கள் இதனூடாக போக்குவரத்திற்கு அனுப்பி வைத்தனர்.

காட்டு வழியாகவே தினமும் பாடசாலைக்கு சென்று வருகின்றனர். இது ஒரு பாதுகாப்பானது இல்லைஎன்றும் குறிப்பிட்டுள்ளனர்:

கொட்டும் வெயிலில் இந்த மாணவர்கள் தினமும் நீண்ட தூரம் காட்டுவழியில் கால் நடையாக பயணம் செய்து தமது கல்வியை தொடரும் அவலநிலை காணப்படுகின்றது. (2-315)

## 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை'

# விமர்சனப் பகுப்பாய்வு நூல் அறிமுக நிகழ்வு

மூத்த இடதுசாரியும், முழு நேர அரசியல் செயற்பாட்டாளருமான சி. கா. செந்திவேலினால் எழுதப்பட்ட வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவுவரை என்ற அரசியல் விமர்சன பகுப்பாய்வு நூலின் அறிமுக நிகழ்வு எதிர் வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணிக்கு வவுனியா நகர பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

என். பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு வரவேற்பு உரையை பொ. கஜானன், ஆய்வு உரையை மருத்துவரும் சமூகச்செயற்பாடாளருமான செ. மயூரகன் கருத்துரையை வழங்கியா தேசிய கல்விக் கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர் ந. பார்த்தீபன், மருத்துவரும் வவுனியா தமிழ் மாமன்ற செயலாளருமான வே. துவாரகன், புதிய சிந்தனைப் பெண்கள் அமைப்பின் செயற்பாட்டாளர் திருமதி பி. பிரசாந்தினி ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தோழர் சி. கா. செந்திவேல் ஏற்புரையை ஆற்றவுள்ளார். நன்றியுரையை சு. செல்வக்குமாரன் நிகழ்த்துவார்.

கடந்த கால இன விடுதலைப் போரின் வரலாற்றை ஆய்வு செய்வதான இந் நூலின் அறிமுக நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)

## வெடுக்குநாறி மலை உச்சியிலுள்ள

# ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூசைகள்



நெடுங்கேணி ஒலுமடு வெடுக்குநாறி மலை உச்சியிலுள்ள ஆதி சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரத பூசைகள் இடம் பெற்றுள்ளது.

ஆலய பூசகரினால் ஆதி சிவனுக்கு அபிசேகங்கள் இடம் பெற்று பூசைகளும் நடை பெற்றுள்ளது.

பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் உச்சிமலை வரலாற்று சிவனை தரிசிப்பதற்காக பெருந்திரளான மக்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (2)



ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விரத பூஜை வழிபாடு நடை பெற்ற போது....

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கமக்கார அமைப்புகளுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அநேகமான கமக்கார அமைப்புக்களுக்கான புதிய நிர்வாகத்தெரிவுகள் நடைபெற்றுள்ளபோதிலும் உருத்திரபுரம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கான புதிய நிர்வாகத்தெரிவுகள் இதுவரை நடைபெறவில்லை எனவிவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இப் பகுதிக்கான நெல் காயவிடும் தளம் எதுவும்அமைக்கப்படவில்லை. வயற்காணிகளின் கழிவு வாய்க்கால்கள் சீர் செய்யப்படவில்லை எனவும் விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.


எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இப் பகுதி விவசாயிகள் நன்மையடைய உதவவேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-254)

# விளையாட்டு,உடற்கல்வி ஆத்மார்த்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு கலை

## முல்லை. மண்ணிற்கு பெருமை சேர்த்த தர்சிகாவின் கௌரவிப்பு நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

**(பனிக்கன்குளம்)**

**விளையாட்டு, உடற்கல்வி நிகழ்வுகள் என்பது முழுவிருப்புடன் ஆத்மார்த்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருகலை. முறையான பயிற்சியும் நேரக்கட்டுப்பாடும் ஊக்கமும் எந்தவொரு வீரனையும் வீராங்கனையும் உச்சிக்கு எடுத்துச் செல்லும் என்பதற்கு தேவராசா தர்சிகா சிறந்த உதாரணம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பெருமிதம் அடைந்தார்.**





ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டியிலே வெற்றியீட்டிய முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தை சேர்ந்த பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவி தேவராசா தர்சிகா மற்றும் அவரை பயிற்றுவித்த ஆசிரியர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு செல்வபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

கடந்த 27.12.2017இல் கோலாலம்பூர், மலேசியாவில் நடைபெற்ற ஆசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான பளு தூக்கல் போட்டியில் இலங்கையின் வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாண்டியன்குளம் மத்திய மகா வித்தியாலயம் சார்பாக 48 கிலோ பளுதூக்கல் பிரிவில் போட்டியிட்டு 90 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்தார் செல்வி தேவராசா தர்சிகா.

ஆரம்பம் முதலே பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மாணவிக்கு பளு தூக்கல் போட்டியில் கலந்து கொள்ளும் எண்ணம் எவ்வாறு உருவானது என அறிய முற்பட்ட போது சில விடயங்கள் தெரிய வந்தன.

இம் மாணவியின் தாய் தந்தையர் சாதாரண விவசாயத் தொழிலாளர்கள். இவர் கற்கும் பாடசாலை பௌதீக வளங்கள் மிகவும் குறைந்தது. ஆனாலும் இங்கு கற்பிக்கின்ற உடற்கல்வி ஆசிரியர் பத்மநாதன் பிரதீபனின் அயராத முயற்சியே காரணமாகும். சனி , ஞாயிற்றுக்கிழமைகளில் கூட வீட்டுக்குச் செல்லாது காலை வேளைகளில் மூன்று மணித்தியாலப் பயிற்சி அதேபோன்று மாலையில் இரண்டு மணி நேரப் பயிற்சி என நாளொன்றுக்கு ஐந்து மணித்தியாலங்கள் கடுமையான பயிற்சிகள் வழங்கியே 48கிலோ தூக்க வேண்டிய இம் மாணவியை 90 கிலோ நிறையைத் தூக்க வைத்து ஆசிய மட்ட சாதனையாளராக உயர்த்தியிருக்கின்றார்.

எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்கின்ற எண்ணங்கள் உண்டா என எமது அலுவலர் அவரை வினவிய போது "ஆம்" என்ற பதில் ஓங்கி ஒலித்தது. ஒலிம்பிக்கின் போது எவ்வளவு எடையைத் தூக்க வேண்டும் என விசாரித்த போது 150 கிலோ எனப் பதிலளித்தார்.

எனவே இத்தகைய ஊக்கமுடைய பிள்ளைகள் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இவர்களுக்கான பயிற்சி உபகரணங்கள்கூட இல்லாத நிலையில் இவ் உபகரணங்களை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலக விளையாட்டுப் பிரிவு ஊடாக பெற்றுக் கொண்டதாக அறிந்தேன் .

இவ் வீராங்கனைக்கான மேலதிக பயிற்சிகளுக்கும், தேவையான உபகரணங்கள், உடைகள், போசாக்கு உணவு வகைகள் தொடர்பான செலவீனங்களை ஈடு செய்வதற்கு இவர்களின் குடும்பச் சூழல் இடமளிக்காத நிலையில் இச் செலவீனங்களை பொறுப்பேற்றுக்கொள்ள நல்ல மனம் படைத்த தனியார் நிறுவனங்களோ அல்லது வெளிநாட்டு உதவுநர்களோ அல்லது பணம் படைத்தவர்களோ முன்வர வேண்டுமென இத் தருணத்தில் ஒரு பகிரங்க வேண்டுகோளை மேற்கொள்வது பொருத்தமானது என எண்ணுகின்றேன்.

தர்சிகா அனைத்து சிறப்புக்களும் பெற்று செல்வச் செழிப்புடன் வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் எனத் தெரிவித்தார். (2-281-315)

# மாகாண சபை உறுப்பினரின் நிதியில் ஆண்டான்குளம் பாலம் மறுசீரமைப்பு



(முல்லைத்தீவு)

ஆண்டான் குளம் பாலத்தினை குறுங்கால மறுசீரமைப்புக்காக தனது 2018 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வழங்குவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆண்டான் குளத்தின் முதன்மைப்பாலமானது மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த பாலத்திற்கு அப்பால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் விவசாயிகள் வேளாண்மை செய்து வருகின்றனர். இதனால் அதற்கான உள்ளீடுகளை எடுத்துச்செல்வதிலும், அறுவடையின் பின் நெல் மணிகளைக் கொண்டு செல்வதிலும் விவசாயிகள் பல இடர்பாடுகளை சந்தித்து வருவதாக அந்தப்பகுதி கமக்கார அமைப்பினருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த பாலத்திற்கு அப்பால் ஆண்டான்குளம் மற்றும் ஆலடிக்குளத்தின் பகுதியிலும், அதன் கீழ் ஆத்தாங்கடவைப் பகுதியிலுமாக 530 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யப்படுகின்றது. இந்த விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இப் பாலத்தை கடந்தே செல்ல வேண்டும்.

இதற்கப்பால் நித்தகைக் குளத்தின் கீழ் 935ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் காணப்படுகின்றன. இந்த நித்தகைக் குளமும் அதனோடிணைந்த வயல் நிலங்களும் இன்றுவரை அரசாங்கத்தால் விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அந்த குளமும் குளத்துக்குரிய வயல் நிலங்களும் விடுவிக்கப்படும் போது. அந்த பகுதிக்குச்சென்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த பாலத்தை கடந்தே செல்ல வேண்டியுள்ளது.

அத்தோடு இந்தப் பாலத்திற்கூடாக கால்நடைகளை மேய்ச்சல் தரைக்கு கொண்டு செல்வதிலும் மக்கள் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இந்த பாலத்தை நிரந்தரமாக மறுசீரமைக்கும் நடவடிக்கை தொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் என்றும் தெரிவித்தார். (2)




# வைத்தியர் இன்றி இயங்கும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

## முதலமைச்சர், சுகாதார அமைச்சருக்கு பொதுமக்கள் கடிதம்

(மல்லாவி)

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட உருத்திரபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக வைத்தியர் மற்றும் பதில் வைத்தியர் எவரும் இன்றி இயங்கி வரும் நிலையில் தினசரி பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 20 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வைத்தியரின் வருகைக்காக காத்திருந்த பின்னர் வீடு திரும்பிச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும்வடக்குமாகாண சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

சித்த ஆயுள்வேத வைத்தியசாலையானது உருத்திரபுரம், எள்ளுக்காடு, ஜெயந்தி நகர், திருநகர், சிவநகர், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு உட்பட சுமார் 20 பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்குவைத்தியசேவையை வழங்கி வருகின்றது.

இந் நிலையில், வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் மூன்று, வருடங்களைக் கொண்ட புலமைப் பரிசில் கற்கைநெறி ஒன்றை முன்னிட்டு வெளிநாடு சென்று விட்டார்.

இவ்வாறு இவர் வெளிநாடு செல்லும் போது வைத்தியசாலையில் பதில் வைத்தியராகக் கடமையாற்றுவதற்காக கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர் பதில்கடமையை பொறுப்பேற்றிருந்த நிலையில் அந்த வைத்தியரும் கடமைக்கு வருகை தருவதில்லை என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அத்துடன், வைத்தியர்கள் கடமைக்கு வருகை தரும் கால நேர அட்டவணை காட்சிப்படுத்தப்படாது உள்ளது. நோயாளர்கள் பதில் வைத்தியர் வருவார் என நீண்ட நேரமாக காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

இதேவேளை, இந்த சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் பல இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை அரசாங்கம் வழங்கி களஞ்சியப்படுத்தியுள்ள நிலையில் அவை நீண்டகாலமாக பயன்படுத்தப்படாது இருப்பதால் காலாவதித் திகதியை நெருங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் தகவல்களை அறிய கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் - கம்சநாதனிடம் தொலைபேசி ஊடாகதொடர்பு கொண்ட போதும் அவரது தொடர்பு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-15)

# வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்படும்

# தரிப்பிட ஒளி சமிக்ஞை ஒளிரவிடப்படாத வாகனங்களின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவிப்பு

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதி ஊடாக செல்லும் ஏ - 9 வீதியிலும் மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட கிராம வீதிகளிலும் இரவு நேரங்களில் தரிப்பிட ஒளி சமிக்ஞை ஒளிர விடப்படாது வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் மீது எதிர்வரும் 20, ஆம் திகதி செவ்வாய்கிழமை தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய நாட்களாக ஏ-9, வீதியில் இரவு நேரங்களில் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தரிப்பிட ஒளி சமிக்ஞை ஒளிர விடப்படாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் பலர் உயிரிழந்துள்ளதுடன், சிலர் படுகாயமடைந்த நிலையில் அங்கவீனர்களாகிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கு உதாரணமாக ஏ- 9, வீதியில் உள்ள கொக்காவில் 18, போர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாட்டெரு ஏற்றிய பாரவூர்தியுடன் ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதிய விபத்துச் சம்பவத்தில் அதில் பயணித்த நான்கு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், ஏ- 9 வீதியில் உள்ள உமையாள்புரம் பகுதியில் விபத்துக்குள்ளான நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து மீது மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இவ்வாறான நிலையைக் கருத்தில்கொண்டு எதிர் வரும் 20 ஆம் திகதி செவ்வாய்கிழமை தொடக்கம் இரவு நேரங்களில் ஒளி சமிக்ஞை இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வாகனங்கள் மீது பிரதேச சபையின் அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (2-15)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## வருங்கால சந்ததிக்காய் சிந்திப்போம்-மாசற்றதோர் உலகமைக்க வழிவகுப்போம்

தற்கால உலகமானது தொடர்பாடல் போக்குவரத்து, பொருளாதாரம், வணிகம் என பல வழிகளில் முன்னேறிச் செல்கிறது. அவ்வாறு முன்னேறிக் கொண்டு செல்கையில் மனிதர் தமது சுயநலன்களை மட்டும் பொருட்படுத்தாது தமது சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எமது சூழல் எமக்கு



பலவகையான நன்மைகளையே ஈட்டிக் கொடுக்கிறது. அந்த வகையில் ஒவ்வொருவரும் நமது சூழலை கட்டிக் காத்து அடுத்த சமுதாயத்தினரும் பயன்களை பெறக்கூடிய வகையில் பாதுகாக்க வேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடையாதநாடுகளிலும் தற்காலத்தில் சூழல் மாசடைதல் என்பது காட்டுத் தீ போல பரவி வருகிறது. சூழலை அழிப்பதும் நாமே அதன் தீமைகளை அனுபவிப்பதும் நாமே என இருந்து விடக் கூடாது.

அவ்வாறாக சூழலில் உருவாகும் மாசுக்களை முறையான விதத்தில் அகற்றி சூழலிற்கு நன்மைகளை பெறச் செய்யவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அப்பொழுது தான் இப்பூமி பல நன்மைகளை நமக்கு தரக்கூடியதாக இருக்கும்.


இன்றையமக்கள் தமதுநலன்களை மட்டுமே கருதுவதால் இவ்வுலகம் தினம் தினம் அழிந்து கொண்டு போவதை கருத்தில் கொள்ளுவது இல்லை. இவ்வுலகம் தேய்ந்து தேய்ந்து ஒருகாலத்தில் மக்கள் எவருமேவாழ ம்டியாத வறண்ட தாவரங்களற்ற ஒரு துளி நீர் அற்ற ஒரு சிறிய புள்ளித் திணிவையே அவதானிக்கக் கூடிய நிலை அண்மித்துக் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு குழந்தையும் இச்சூழலில் பிறக்கும் போது எந்த ஒரு பிரச்சினையையும் அனுபவிக்காது பிறக்கின்றது. ஆனால் இச்சூழலின் மாசடைதல் காரணமாக அக் குழந்தை பல இடர்களை அனுபவித்து இறந்து மடிகின்றது. சூழல் தொகுதியின் மாசாக்கத்தால் மனிதர்கள் பல நோய்களையும் அனுபவிக்க நேரிடுகின்றது. பிறந்த குழந்தை ஏன் இவ்வாறான இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்? ஏன் திடீர் இறப்பு நேரிடுகிறது? இவை அனைத்துக்கும் பின்னால் மறைந்திருந்து மானிடரின் கண்களை மறைக்கும் விடயங்கள் எவை? அவற்றை தெளிவு படுத்தும் காலம் எப்போது எனப்பல கேள்விகளுக்கு மக்கள் விடைகாணும் போதே ஒவ்வொரு மனிதரினதும் முட்டாள் தனமாக முடக்கப்படட பல உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படுகிறது.தற்போது நிலம், நீர், வளி ஆகிய மூன்றும் பரவலான மாசாக்களுக்கு உள்ளாகின்றன . இவற்றை முறையாக பராமரித்துவரின் சூழலின் சூழல் முகாமைத்துவம் சிறந்த முறையில் அமையும்.

சிறந்த முகாமைத்துவத்தை அனைத்து மக்களும் கடைப்பிடித்து நடப்பார்களாயின் இவ்வுலகில் சூழல் மாசடைதலால் அதிகரித்து வரும் பிரச்சினைகள் ஒருமுடிவுக்கு கொண்டுவரப்படும். வளிமாசடைதலால் பல பிரச்சினைகளை அனுபவிக்க நேரிடுகிறது. இப்பூமியை சுற்றி வளிமண்டலம் ஒருபோர்வையாகக் காணப்படுகிறது. அவ் வளி மண்டலத்தினால் தான் எமது பூமி பல நன்மைகளையும் ஏன் தீமைகளையும் கூடப் பெற்று வருகின்றது.

வளி மண்டலத்தில் உள்ளவாயு மூலக்கூறுகள் அனைத்தும் பலதேவைகளை நிறைவேற்றுகின்றது. அந்த வகையில் ஒட்சிசன் வாயு இவ்வுலகத்தையே உயிரோடு பேணுவதற்கு தேவையான உயிர் நாடியாக காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் பல ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புக்களை மேற்கொள்பவர்களுக்கு பெரிதும் துணைபுரிகின்றது. எவ்வாறெனில் மலைச் சுரங்கங்கள், நீர் வழிகள், அண்ட வெளிகளில் சென்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றது. அப்போதுதான் சமூகம் பலவகையிலும் முன்னேறிச் சென்று உலக சாதனைகளை புரியக்கூடியதாக இருக்கும். அதேபோல் நைதரசன் வாயு கூடபல தேவைகளை ஆற்றுவதற்கு பயன்படுகின்றது. அவ்வாறான வளிமண்டலம் இறந்த பிராணிகளை வீதிகளில் வீசுதல், எரிபொருட்களின் தகனம், வாகனங்களின் புகை, தொழிற்சலைகளின் வாயுக்கழிவுகள் என்பவற்றினால் பெரிதும் மாசாக்கத்திற'கு உட்படுகின்றது. வாயுக்கழிவுகளை முறையாக முகாமைத்துவம்செய்து அனுப்புவதன் மூலம் வளிமண்டலம் பாதுகாக்கப்படும். இதனால் ஓசோன் படையானது பாதுகாக்கப்படுகின்றது. ஓசோன் படையில் துவாரங்கள் எற்படுவதனால் நேரடியாக சூரிய ஒளி புவியை வந்தடைந்து பல வகையான நோய்களை ஏற்படுத்துகின்றது. குளோரோ புளோரோ



காபன், கந்தக வீரொட்சைட்டு என்பவையே ஓசோன் படை தேய்வடைவதற்கு காரணமாகும். இவ்வாறான வாயுக்களை விடுவிப்பதை குறைத்தல் மிகமுக்கியமாகும். அந்த வகையில் குளிர் சாதனப்பெட்டியை அதிக தடவை திறந்து மூடுவதை குறைக்க வேண்டும். இதனால் சூழலுக்கு வெளிவிடப்படும் குளோரோ புளோரோ காப னின் அளவைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு அமிலவாயுக் களின் வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கை களையும் முன்னெடுத்து முகாமைத்துவம் செய்ய வேண்டும். இதனால் மாசற்ற சூழலை அமைத்துக் கொள்ள முடியும்.



வளிமண்டல தொகுதியை மட்டுமல்லாது நீர்த் தொகுதி யையும் பாதுகாக்கவேண்டும். இதற்காக நீர்க்கழிவுகளை முறையாக அகற்றும் செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

நீர் நிலையங்களை முறையாக பேணுவதற்கு நீர் நிலைகளில் எண்ணெய்க் கசிவுகள் படர்வதை தடுக்க வேண்டும். இதன் மூலம் ஒட்சிசன் வாயுவானது நீரை ஊடுருவ முடியாது போகின்றது. இதனால் நீர் நிலைகளில் உள்ள மீன்கள்,பூச்சிகள் போன்ற பிராணிகள் இறக்க நேரிடுகின்றது. இதனால் தூய்மையான நீரைபெறுவது சிரமமாகிறது. இதனால் அன்றாட தேவைகளை நிறைவேற்றும் நீரைபெறுவது மிகவும் கடினமான விடயமாகும். நீரைப் பாதுகாப்பதற்கு பலவழிகள் உள்ளன. தொழிற்சாலைக் கழிவுகளைநீர் நிலைகளில் போடுவதால் அனைத்து இரசாயனக் கூறுகளும் நீருடன் தாக்கமடைந்து பல வாயுக்களின் வெளியேற்றத்தை ஊக்குவிப்பதுடன் நீரையும் மாசடையச் செய்கிறது. இதனை முறையாக முகாமைத்துவம் செய்வதற்குரிய பல நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு நீர் நிலையங்களிலும் அதனை முறையாக பராமரிப்பதற்குரிய படங்களை காட்சிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு சராசரி மனிதன் அன்றாட வாழ்வில் நீரினால் பெரும் முக்கியத்துவங்களை புரிந்துகொண்டு நடப்பதற்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். நீர் நிலைகளுக்கு அடியில் அணுப் பரிசோதனைகள் மேற்கொள்வ தால் நீர்ச்சூழல் பெரிதும் மாசாக்க த்திற்கு உட்படுகின்றது . ஆகவே முறையான பராமரிப்பு நீர்ச் சூழ லிற்கு அவசியம்.

அதுமட்டுமல்லாது தரைச் சூழலும் பல மாசாக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. நிலத்தில் குப்பை கூழங்களையும் இரசாயனக் கழிவுகளையும் உக்க முடியாத பொருட்களையும் புதைப்பதனால் நிலத்தில் இரசாயனக் கூறுகளின் தாக்கம் அதிகரித்து மனிதர்களைத் தாங்கும் பூமி பல அழிவுகளை சந்திக்கின்றது. மண்சரிவு, மண்ணரிப்பு போன்ற நிலம் தொடர்பான அனர்த்தங்கள் எட்டப்படுவதற்கான வாய்ப்பும் அதிகமாகின்றது. நிலத்திலுள்ள இரசாயனக் கூறுகளால் நிலம் பெரிதும் பாதிப்படைந்து மீளமுடியாத நிலை எட்டப்படுகின்றது.

இவ்வாறான சூழல் மாசடைவுகளால்தான் இன்றைய காலகட்டத்தில் சூழல் மிகப்பெரிய அழிவை எதிர்நோக்குகின்றது. அதுவே இன்றுள்ள பூகோள வெப்பமாதல் ஆகும். இதனால் நாளுக்குநாள் ம்ரண வீதமும் அதிகரிக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு மூலமாக விளங்குவது சூழலின் மாசாக்கமே ஆகும். சூழலை முறையாக பேணி வந்தால் இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய அவசியம் இல்லை

பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக விளங்கும் மனிதர்களினால் சூழல் பெரிதும் மாசாக்கப்படு கழிவுகளை முறையாக அகற்ற முடியாத நிலையில் நின்று தள்ளாடுகின்றது. சிறந்த முறையிலான சுகாதார ரீதியான கழிவகற்றலை முகாமைத்துவம் செய்தால் நன்மைகள் பலவற்றை பெறக்கூடியதாக இருக்கும். தீர்வு இல்லாப் பிரச்சினையே இல்லை என்பார்கள். அதற்கு அமைவாக ஒவ்வொரு பிரச்சினையையும் இனம் கண்டு அதற்கு முறையான தீர்வை பெற்று சூழலை பாதுகாக்க வேண்டும். சூழலை முறையாக முகாமைத்துவம் செய்வதனால் யாவரும் நலனுடன் வாழமுடியும்.

நாடு மென்மேலும் அபிவிருத்தி அடைந்துவரும். சூழலில் கழிவுகளை அகற்றுவதற்காக ஒவ்வொரு பிரதேசங்களிலும் மாநகர சபைகள் பல நிறுவப்பட்டுள்ளன. அவற்றின் உதவி எந்நேரமும் யாவருக்கும் கிடைக்க வேண்டும். இதனால் சூழல் முகாமைத்துவம் சீராக அமையும்.

மாசற்ற சூழலை வளர்ப்பதற்கு முறையான கழிவகற்றல்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன. யாவரும் வாழ் நாள் முழுவதும் நலமும் பலமும் பொருந்தி தேக ஆரோக்கியத்துடன் நோய்நொடி இன்றிபல ஆண்டுகளால் உயிர் வாழமுடியும். அதற்கு இப்பூமியும் பூமியின் வளங்களும் பெரிதும் துணை புரிகின்றது. எனவே மாசற்ற உலகை கட்டியெழுப்புவதற்காய் ஒன்றுசேருவோமாக!


கஜித்தா உதயகுமார்
2017 உயிரியல் பிரிவு
யா/சுண்டிக்குளி
மகளிர் கல்லூரி.


### வாரத்திற்கு ஒரு புதிர்! 204

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்-2018
எந்த நாட்டில் , எந்த நகரத்தில்
நடைபெறுகின்றன?

புதிர் 204இற்கான விடைகளை 26.02.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்ஷினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான
சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 203 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கிஷானி சுகிதரன்
யா/ வேலணை மத்திய
கல்லூரி

**புதிர் 203 க்கான கேள்வியும் விடையும்:**

இந்தியாவின் இரும்பு மனிதா் என அழைக்கப்பட்டவா் யாா் ?

Sardar Vallabhbhai Patel

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 204**

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................


முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

## தத்தளிக்கிறது நல்லாட்சி

# ஐ.தே.கவுக்கு எதிரான அரசு அமைத்தால் ஆதரவு - வாசு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அரசாங்கத்தினை அமைப்பதானால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது ஆதரவினை வழங்குவதில் உறுதியாகவுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர்வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மக்களின் ஆணையில்லாமல் நல்லாட்சி அரசாங்கத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்ல முடியாது, அவ்வாறே கரு ஜெயசூரிய பிரதமராக நியமிக்கப்பட்டால் நாட்டின் ஆட்சி நடவடிக்கைகள் பாரதூரமான பின்னடைவினை சந்திக்கும்.

மக்களின் ஆதரவோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டாட்சி நல்லாட்சி அரசாங்கம் இன்று மக்களின் எதிர்ப்பின் மத்தியில் தத்தளித்துக் கொண்டுள்ளதெனத் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஒத்துழைப்பு வழங்கத் தயார்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையகத்தில் வெற்றி பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதில் சமகால அரசியல் நிலவரம் பற்றியும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மேற்கொள்ளும் எந்தவொரு தீர்மானத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கப் போவதாக தொண்டமான் தெரிவித்துள்ளார். (இ-7)

# வடக்கு மாகாண தொண்டராசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையாகப் போராடி நியமனம் பெறவேண்டும்

## சங்கத் தலைவர் சதீஸ்குமார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரிவினையாக போராடுவதில் எந்தப்பயனும் இல்லை எனத் தெரிவித்த வடக்கு மாகாண தொண்டர் ஆசிரிய சங்கத்தலைவர் செல்வராசா சதீஸ்குமார், ஒற்றுமையுடன் போராடி நியமனங்களைப் பெற முன்வாருங்கள் என சக தொண்டர் ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களாக 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் சுமார் பத்தாண்டு காலம் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 676 பேர் தமக்கான நியமனங்களை கோரி பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அந்த வகையில் தொண்டர் ஆசிரியர்கள் 182 பேருக்கும், அதற்கு சமமான காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 142 ஆசிரியர்களுக்கும் நேற்று அலரி மாளிகையில் இலங்கை ஆசிரியர் சேவை யின் தரம் 3,2 இற்குரிய நியமனக் கடிதம் வழங் குவதாக அறிவிக்கப்பட்டது. மேற்குறித்த நியமனத்தில் அதிகளவான பெரும்பான்மையின ஆசிரியர்கள் உள் வாங்கப்பட்டிருந்தனர்.

ஆனால் அனைவருக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஏனைய தொண்டர் ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து மேற்குறித்த நியமனம் இடைநிறுத்தப்பட்டது. அதை கண்டித்து கொழும்பிலும் வடக்கிலும் தொண்டராசிரியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ஆசிரிய நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சகோதரத்துவ ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறோம்.

நாம் அனைவரும் ஒரே காலப்பகுதியில் கடமையாற்றிய ஒரே தரத்தையுடைய ஆசிரியர்கள். நிரந்தர நியமனத்துக்காக நாம் ஒன்றாகவே போராடி வந்தோம்.

அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்குவதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் எதற்காக இவ்வாறு பிரிவினையாக போராடி தனித்து உங்களுடைய நியமனத்தை பெறுவதற்கு முற்படுகிறீர்கள். நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்தால் வெகு விரைவில் அனைவருக்குமான நியமனத்தை பெற முடியும். இதனை புரிந்து கொண்டு ஒரே அணியாக செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# பேத்தி மீது தாக்குதல் பொய்ச் செய்தியாம்

## அமைச்சர் பௌஸி



(கொழும்பு)

நீதிமன்ற வளாகத்தினுள் தனது பேத்தி மீது அவரது முன்னாள் கணவர் தாக்குதல் நடத்தியதாக வெளிவந்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என, அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார். தனது குடும்பத்தினர் மீது அவதூறைப் பரப்புவதற்காகவே இவ்வாறான செய்திகள் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது பேத்தியை அவரது கணவர் கடந்த பத்தாம் திகதி நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து தாக்குதல் நடத்தியதாகவும் அது குறித்து சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு, பொலிஸ் உட்பட பல முறைப்பாடுகளை அவர் சுமத்தியதாகவும் செய்திகள் வெளியாகின.

இதை மறுத்திருக்கும் அமைச்சர் பௌஸி, அச்சம்பவம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், தனது பேத்தியின் திருமண வாழ்க்கைக்குள் வஸீர் அஹமட் என்ற திருமணமான நபர் ஒருவர் நுழைந்ததாகவும் அதனால் தனது பேத்தியின் மணவாழ்க்கை முறிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். தனது தனிப்பட்ட வேலைகளைச் செய்து கொள்வதற்காக தனது பேத்தியை வஸீர் அஹமட் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனது பேத்தியின் மகளை வஸீர் அஹமதுவிடம் கையளிக்க நீதிமன்றில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருப்பதையடுத்து, தன் குடும்பத்தினர் மீது அவதூறு பரப்பும் விதமாகவே இது போன்ற பொய்யான செய்திகளை அவர் பரப்பி வருவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# அம்பாறையில் 98 ஆயிரம் பேர் தேர்தலில் வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 98 ஆயிரத்து 914 பேர் வாக்களிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதியான 5 இலட்சத்து 673 வாக்காளர்களுள் 4 இலட்சத்து ஆயிரத்து 759 வாக்காளர்களே வாக்களித்துள்ளனர். அதன்படி 98,914 பேர் வாக்களிக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை, நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தின் 20 சபைகளுக்குமான தேர்தலில் வாக்களித் தவர்களின் 4 ஆயிரத்து 105 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி அளிக்கப்பட்ட 401,759 வாக்குகளுள் 397,654 வாக்குகள் செல்லுபடியானதாக கணிக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடுதலான வாக்குகள் கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் வாக்களித்த வாக்காளர்களின் வாக்குகளே கூடுதலாக நிராகரிக்கப்பட்டுள்ளன. இங்கு 670 வாக்குகள் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# ஜனாதிபதியும் பிரதமரும் சுயமாக பதவி விலக வேண்டும் - கருணா



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சுயமாக பதவி விலக வேண்டும் என முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான ஓர் தேர்தல் தோல்வி ஏற்பட்டிருந்தால், அந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகியிருப்பார்கள் எனவும் கருணா தெரிவித்துள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

பலவந்த அடிப்படையில் பதவி விலக்க வேண்டியதில்லை எனவும், அவர்களே தாமாக பதவி விலகவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளதாக அந்தச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்ட பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் நா.தெய்வேந்திராஜா, சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி செல்லக்கதிர்காமம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ். தியாகராஜா, யாழ்.நாகவிகாரை விகாராதிபதி கலைமாணி ஸ்ரீ விமலதேரர், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருள்திரு பி.திருமகன், புனித ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.சேகுராயிது மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் இ.குணநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-136)

# இலங்கை உயர்ஸ்தானிகராலய இணையத்தளம் திடீர் முடக்கம்!

## தமிழர்கள் மீது சந்தேகம்

(லண்டன்)

லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாக பிரித்தானியாவிலுள்ள உலக இலங்கை பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது, லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னாள் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, சைகையொன்றின் மூலம் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டார்.

பின்னர் ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் அவர் மீண்டும் பணியில் இணைக்கப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, புலம்பெயர் தமிழர்களால் இந்த இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாக பிரித்தானியாவில் உள்ள உலக இலங்கை பேரவையின் தலைவர் இந்திக குணவர்தன சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தள முடக்கம் குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திடமும், இலங்கையிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் தாம் கோருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மனைவி கொடூரக் கொலை 26 வருடங்களின் பின்னர் கணவனை கைதுசெய்த பொலிஸ்

(கொழும்பு)

தமது மனைவியை கொடூரமான முறையில் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்ற கணவர் 26 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1992ஆம் ஆண்டு சிலாபம் பகுதியில் வைத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் தமது பிள்ளைகளை பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்த போதே, சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

# பாரதம்

## இந்திய முஜாஹீதீன் தீவிரவாதி டில்லியில் கைது

(டில்லி)

கடந்த 2008ஆம் ஆண்டில் பொலிஸார் நடத்திய என்கவுண்டரில் தப்பித்து ஓடிய இந்தியன் முஜாஹிதீன் இயக்க தீவிரவாதி அரிஷ் கான் என்பவரை பொலிஸார் நேற்று டில்லியில் கைது செய்துள்ளனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் அசம்கர் மாவட்டத்தை பூர்வீகமாக கொண்ட அரிஷ் கான் (எ) ஜூனைத், இந்தியாவில் இடம்பெற்ற ஐந்துக்கும் மேற்பட்ட குண்டுவெடிப்புகளில்தொடர்புடையவர்என்று கூறப்பட்டது. இந்தியன் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த அரிஷ்கான் கடந்த 2008ஆம் ஆண்டு பொலிஸார் நடத்திய என்கவுண்டரில் தப்பித்து ஓடிவிட்டார்.

30 பேரை பலிகொண்ட டில்லி தொடர் குண்டு வெடிப்பு நடந்த 6ஆவது நாளில் பொலிஸார் என்கவுண்டரை நடத்தியதில், அரிஷ்கான் தப்பித்து ஓடிய நிலையில், இரு தீவிரவாதிகள் என் கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும், இருவர் கைது செய்யப்பட்டனர்.

தப்பி ஓடிய அரிஷ் கான் தலைக்கு தேசிய புலனாய்வு முகமை 10 இலட்சம் ரூபாய் விலை நிர்ணயித்தது. டில்லி பொலிஸூம் 5 இலட்சம் ரூபாய் விலை வைத்தது.

இந்நிலையில், நேற்று டில்லியில் சிறப்புப்படை பொலிஸார் அரிஷ்கானை கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி இந்தியாவின் பின்லேடன் என்று அழைக்கப்பட்ட குரேஷி டில்லியில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## தென்னாபிரிக்காவில் ...

## பதவியை இராஜினாமா...

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிய ஜனாதிபதி ஜேக்கப் ஜூமாவுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர முடிவெடுக்கப்பட்டதையடுத்து அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சியில் உள்ளது. ஜனாதிபதியாக ஜேக்கப் ஜூமா பதவி வகித்து வருகிறார்.

அவர்மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருப்பதால், தலைமையை மாற்ற கட்சி திட்டமிட்டது. ஆளுங் கட்சி எம்.பிக்களே அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினர்.

ஆனால் எதற்கும் பிடி கொடுக்காத ஜூமா, தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். நம்பிக்கை வாக்கெடுப்பிலும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதவியை தக்க வைத்துக் கொண்டார்.

இதையடுத்து கடந்த டிசெம்பர் மாதம் துணை ஜனாதிபதியான சிரில் ராமபோசா, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இதனால் அவர் 2019 பொதுத் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என தெரிகிறது.

## காதலர் தினத்தில் மோடிக்கு ஐலவ்யூ சொன்னீர்களா?

### குஜராத் எம்.எல்.ஏ. கேள்வி



(டில்லி)

பிரதமர் மோடிக்கு யாராவது ஐலவ்யூ சொன்னீர்களா? என குஜராத்தை சேர்ந்த சுயேட்சை எம்.எல்.ஏவான ஜிக்னேஷ் மேவானி டுவிட்டரில் கேள்வியெழுப்பியுள்ளார்.

உலகம் முழுக்க காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பா.ஜ.க., ஆர்எஸ்எஸ், பஜ்ரங் தலம் உள்ளிட்ட கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கின்றன. காதலர் தினம் இந்திய கலாசாரத்தை கெடுக்கிறது என கூறி சில இடங்களில் வன்முறையில் கூட ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், குஜராத்தை சேர்ந்த சுயேட்சை எம்.எல்.ஏவான ஜிக்னேஷ் மேவானி இதுகுறித்து ஒரு டுவிட் செய்துள்ளார். அதில் எனக்கு இன்று நிறையப் பேர் ஐலவ்யூ சொன்னார்கள்.

ஆனால் யாராவது பாசமாக மோடிக்கு ஐலவ்யூ சொன்னார்களா? என எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஹாப்பி வேலண்டைன்ஸ் டே என தெரிவித்து அவரது டுவிட்டுக்கு பா.ஜ.க. ஆதரவாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலாக அவர்கள் காதலர்தினம் குறித்து மோசமாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதேபோல் ஜிக்னேஷ் மேவானியின் இந்தக் கருத்தையும் கலாய்த்து இருக்கிறார்கள்.

அதேபோல் ஜிக்னேஷ் மற்றொரு டுவிட்டில் பிரியா பிரகாஷ் வாரியாரின் வைரல் வீடியோவை பதிவேற்றம் செய்துள்ளார். காதலுக்கு எதிராக பேசுபவர்களுக்கு இந்த வீடியோதான் சிறந்த பதில் என அவர் தெரிவித்துள்ளார். (10)

## தீபா – ராஜா மோசடி முறைப்பாடு

### வழக்குப் பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவு



(சென்னை)

கட்சிப் பதவி பெற்றுத் தருவதாக ரூ 1.12 கோடி மோசடி செய்ததாக ஜெ.தீபா மற்றும் அவரது உதவியாளர் ராஜா மீது புகார் விசாரித்து முகாந்திரம் இருப்பதால் வழக்குப் பதிவு செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஈஞ்சம் பாக்கத்தைச் சேர்ந்த முட்டை வியாபாரி ராமச்சந்திரன். இவர், சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில், 'எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவையின் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் பதவி வகித்தேன். அப்போது கட்சி அலுவலகம் செலவு மற்றும் குடும்பச் செலவுக்காக ஜெ. தீபாவும், அவரது கார் சாரதி ஏ.வி.ராஜாவும், கடந்த 2017 பெப்ரவரி முதல் பல்வேறு காலகட்டங்களில் ரூ. ஒரு கோடியே 12 இலட்சம் என்னிடம் பெற்றனர். எனக்கு கட்சியின் முக்கிய பதவியும், நாளை ஆட்சிக்கு வரும் போது அமைச்சர் பதவியும் தருவாக கூறினார்கள். அவர்கள் என்னை ஏமாற்றுகின்றனர் என தெரிந்தும், வாங்கிய பணத்தை திருப்பிக் கேட்டபோது அவர்கள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தனர்.

இதுதொடர்பாக கடந்த மாதம் 11 ஆம் திகதி பொலிஸ் ஆணையரிடம் முறைப்பாடு செய்தேன். ஆனால், அரசியல் காரணத்துக்காக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, என் முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி சென்னை பொலிஸ் ஆணையருக்கு உத்தரவிட வேண்டும்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம்.எஸ்.ரமேஷ், 'இந்த மனுவுக்கு மத்திய குற்றப்பிரிவு பொலிஸாரின் பதிலை கேட்டு தெரிவிக்க வேண்டும்' என்று அரசு சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

விசாரணையை நேற்றுத் தள்ளி



வைத்தார். வழக்கு விசாரணைக்கு வந்தபோது விசாரித்து முகாந்திரம் இருந்தால் வழக்குப்பதிவு செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (10)

## ஜெயா வைத்தியசாலையில் இருந்தபோது வெளிநாட்டில் இருந்தேன் – விவேக்

### ஆணைக்குழுமுன் தெரிவிப்பு



(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சுகயீனமுற்று அப்பலோ வைத்தியசாலையில் அனுமதித்திருந்தபோது, அவரை சென்று சந்திக்கவில்லை என, இளவரசியின் மகனும் ஜெயா தொலைக்காட்சியின் நிர்வாகியுமான விவேக் ஜெயராமன் ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் நீதிபதி ஆறுமுகசாமி ஆணைக்குழு முன்னால் 20க்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் விவேக் ஆணைக்குழுவில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னிலையாகி இருந்தார்.

இதன் போது, விவேக்கிடம் தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்கள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டபோது,

முதலமைச்சர் ஜெயலலிதா சுகயீனமுற்று வைத்தியசாலையில் இருந்த காலப்பகுதியில் வெளிநாட்டில் இருந்தேன்.

இதனால் அவரைச் சென்று பார்க்கவில்லை அத்துடன் ஜெயலலிதா சுகயீனமுற்றமைக்கான காரணம் என்ன என எனக்கு தெரியாது என, விசாரணை ஆணைக்குழுவில் விவேக் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, எதிர்வரும் 28ஆம் திகதி விசாரணை ஆணைக்குழுவில் மீண்டும் முன்னிலையாகுமாறு விவேக்குக்கு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

குறித்த விசாரணையின் போது, தான் எந்தவொரு ஆவணங்களையும் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கவில்லை எனவும் நடைபெற்று முடிந்த விசாரணை தொடர்பில் வெளியே தெரிவிப்பது தவறாகும் எனவும் விவேக் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

ஜெயா தொலைக்காட்சியின் நிர்வாகியான விவேக் ஜெயராமன், கடந்த வருடம் சொத்துக்கள் மற்றும் வருமான வரிகள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (10)

## ஈராக் மறுகட்டமை...

## குவைத் 2 மில்லியன் டொ...

### குவைத் அரசர் தெரிவிப்பு

(குவைத் சிட்டி)

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட ஈராக்கின் மறுகட்டமைப்புக்காக குவைத் அரசு 2 பில்லியன் டொலர் வழங்க உள்ளது.

ஈராக் நாட்டின் மொசூல் உள்ளிட்ட பல நகரங்களை ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு 2014-ம் ஆண்டில் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அங்குள்ள பழைமை வாய்ந்த மசூதிகளை சேதமாக்கிய ஐ.எஸ். இயக்கத்தினர் பெரும்பாலான மக்களையும் கொன்று குவித்தனர்.

அவர்களுக்கு எதிராக சர்வதேச உதவியுடன் களமிறங்கிய ஈராக் அரசுப்படையினர் கடந்த ஆண்டு ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துவிட்டதாக அறிவித்தனர். இதனையடுத்து, போரில் சிதைவடைந்த நகரங்களை மறுகட்டமைக்கும் பணியை

# வெளிநாடு

# ...ல் அரசியல் நெருக்கடி

# ...மா செய்தார் ஜனாதிபதி

ஆனால் பெரும்பாலான எம்.பிக்கள் மற்றும் நிர்வாகிகளின் எண்ணம், ஜேக்கப் ஜூமா தேர்தலுக்கு முன் பதவி விலக வேண்டும் என்பதுதான். ஜேக்கப் ஜூமா மீதான அதிருப்தி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அவரை உடனடியாக பதவி விலக வைப்பது தொடர்பாக துணை ஜனாதிபதி ராமபோசா பலமுறை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கடந்த திங்கட்கிழமை இரவு மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. அவர்பதவியிலிருந்து விலக மறுப்புத் தெரிவித்தார்.

இதையடுத்து ஜேக்கப் ஜூமாவை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக, கட்சியின் தேசிய செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தகவலை கட்சியின் பொதுச்செயலாளர் ஏஸ் மகாலே தெரிவித்தார். இந் நிலையில், ஜேக்கப் ஜூமா தனது ஜனாதிபதி பதவியை உடனடியாக இராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்துள்ளார். இந்த தகவலை அவரே தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து துணை ஜனாதிபதி சிரில் ராமபோசா வெகுவிரைவில் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என கூறப்படுகிறது. (10)

# ஊழல்வாதி ஜேக்கப் ஜூமாவுடன் தொடர்பு குப்தா சகோதரர்கள் வீட்டில் அதிரடி சோதனை

(ஜோகன்னஸ்பர்க்)

ஜோகன்னஸ்பர்க் நகரில் இந்திய வம்சாவளி குப்தா சகோதரர்களின் வீட்டில் அதிரடிப்படை பொலிஸார் அதிரடிச் சோதனை நடத்தியுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டுகளால் தென்னாப்பிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா தென்னாபிரிக்க காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவி பறிக்கப்பட்டு விட்ட நிலையில், அவரது ஜனாதிபதி பதவிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவருடன் இந்திய வம்சாவளியும், பெரும் பணக்காரர்களுமான குப்தாசகோதரர்களான அதுல் ராஜேஷ், அஜய் சகோதரர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தனர்.

குப்தா சகோதரர்கள், ஜனாதிபதியிடம் கொண்டு உள்ள செல்வாக்கை வைத்து, தென்னாபிரிக்க அரசு நிர்வாகத்தில் தலையிட்டு காரியங்களை சாதித்து உள்ளனர் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதை ஜேக்கப் ஜூமாவும், குப்தா குடும்பத்தினரும் மறுத்துள்ளனர்.

இருப்பினும், ஜோகன்னஸ்பர்க் நகரின் உயிரியல் பூங்கா அருகில் அமைந்துள்ள குப்தா சகோதரர்களின் வீட்டில் 'ஹாக்ஸ்' அழைக்கப்படுகிற அதிரடிப்படை பொலிஸார் நேற்று முன்தினம் அதிரடி சோதனை நடத்தினர். ஆனால் அதன் விபரங்கள் வெளியாகவில்லை. குப்தா சகோதரர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே குப்தா சகோதரர்கள் வீட்டுக்கு செல்கிற வீதிகள் அனைத்துக்கும் அதிரடிப்படை பொலிஸார் 'சீல்' வைத்துவிட்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (10)

# பாடசாலை முன்னாள் மாணவனின் துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் பலி!

(புளோரிடா)

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பாடசாலையில் முன்னாள் மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 17 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

புளோரிடா மாகாணத்தில் உள்ள மார்ஜரி ஸ்டோன் மேன் டக்ளஸ் உயர்நிலை பாடசாலையில் நேற்று முன்தினம் துப்பாக்கியுடன் திடீரென நுழைந்த மர்ம நபர் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக சுட்டுள்ளார். இதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிதறி ஓடினர். அவர்களில் சிலர் துப்பாக்கி தோட்டா துளைத்த நிலையில் இரத்த வெள்ளத்தில் சரிந்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அனைவரையும் வெளியேற்றி பாடசாலை வளாகத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதையடுத்து துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் சரணடைந்தார்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் பாடசாலை வளாகத்தினுள் 12 பேரும், வெளிப்பகுதியில் 3 பேரும் உயிரிழந்தனர். படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 2 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதன் மூலம் உயிரிழப்பு 17 ஆக உயர்ந்தது.

தாக்குதல் நடத்திய வாலிபர் பாடசாலையில் படித்த முன்னாள் மாணவர் நிகோலஸ் குரூஸ் என்பதும், ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக பாடசாலையில் இருந்து நீக்கப்பட்டவர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.

அமெரிக்காவில் உள்ள பாடசாலைகளில் இந்த ஆண்டில் இதுவரை 18 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# நடுவானில் விழுந்த விமானத்தின் இயந்திரம்

## பயணிகள் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டனர்

(சான் பிரான்சிஸ்கோ)

சான் பிரான்சிஸ்கோவில் இருந்து ஹவாய்க்கு யுனிடைட் ஏர்லைன்ஸ் விமானம் 363 பயணிகளுடன் வானத்தில் பறந்து கொண்டு இருந்த போது விமானத்தில் சிறிய அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இதனால் விமான பயணிகள் அச்சம் அடைந்துள்ளனர். பிறகு பெரிய சத்தம் ஒன்று கேட்டு இருக்கிறது. பார்த்தால் ஒரு பக்கம் இருந்த இயந்திரத்தின் மேல் பகுதி கழன்று விழுந்துள்ளது.

உடனே விமானம் நிலை தடுமாறியது. விமான பயணிகள் செய்வதறியாது திகைத்தனர். உடனடியாக பயணிகளுக்கு அவசர காலத்தில் செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இந்த நிலையில் பல மணிநேரப் போராட்டத்திற்கு பின் அந்த விமானம் ஹவாயில் பாதுகாப் பாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் இருந்த 363 பயணிகள், 8 விமான பணியாளர் கள், 2 விமான ஓட்டிகள் ஆகியோருக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

கீழே விழுந்த இயந்திரத்தின் ஒரு பாதி விமானத்திலேயே இருந்துள்ளது. மீதி பாதி பசுபிக் பெருங் கடலில் விழுந்துள்ளது. இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (10)





# ...மப்பு பணிக்கு ...டொலர் வழங்கும்



...தற்போது மேற்கொள்ள உள்ளனர்.

இதற்காக, குவைத்தில் நன்கொடையாளர் மாநாடு நடந்தது. அதில், ஈராக்கில் மறுகட்டமைப்புக்கு மட்டும் 88.2 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாக கூறப்பட்டுள்ளது. வீடுகளை இழந்தோருக்கு வீடுகள் கட்டுவதே முதன்மை இலக்கு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் குவைத் அரசர் எமிர் ஷேக் சபா அல் ஹம்மத் அல் சபா, ஈராக் மறுகட்டமைப்புக்காக குவைத் அரசு 2 பில்லியன் டொலர் ஒதுக்கி உள்ளதாக அறிவித்தார்.

இதில் ஒரு பில்லியன் டொலர் ஈராக் நாட்டிற்கு கடனாக வழங்கப்படும். ஒரு பில்லியன் டொலர் ஈராக்கின் மறுகட்டமைப்புக்கு உதவும் வகையில் நேரடி முதலீடு செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

'சர்வதேச நாடுகளின் ஆதரவு எதுவும் இல்லாமல் மறுகட்டமைப்பு பணிகளை ஈராக் அரசாங்கத்தால் ஆரம்பிக்க முடியாது.

அதனால் தான் உலக நாடுகள் இன்று ஈராக் பக்கம் நிற்கின்றன' என்றும் குவைத் எமிர் தெரிவித்துள்ளார். (10)

# லொறி குடை சாய்ந்ததில் 23 அகதிகள் உயிரிழப்பு

(டிரிபோலி)

லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு சுமார் 300 குடியேறிகளை ஏற்றிச் சென்ற லொறி நேற்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறும் நோக்கத் தில் சுமார் 300 குடியேறிகளுடன் சென்ற லொறி லிபியாவின் பனி வாலித் நகரின் அருகே நேற்று நிலைதடு மாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயங்களுடன் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் சோமாலியாவில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் என்று தெரியவந்துள்ளது. (10)

# பேசுவதற்கு வசதியாக கருணாநிதி கழுத்தில் உணவு குழாய் மாற்றம்

(சென்னை)

கருணாநிதிக்கு பேச்சு பயிற்சி அளிக்க கழுத்தில் பொருத்தப்பட்டிருந்த உணவு குழாய் அகற்றப்பட்டு சிறு குழாய் பொருத்தப்பட்டுள்ளது.



தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நலம் பாதித்ததால் அரசியலில் இருந்து ஒதுங்கி ஓய்வெடுத்து வருகிறார்.

கழுத்தில் உணவு குழாய் பொருத்தப்பட்டு இருப்பதால் சரியாக பேச முடிவதில்லை. கருணாநிதியின் கழுத்தில் பொருத்தப்பட்டிருந்த உணவு குழாயை அகற்றி பேச்சு பயிற்சி அளிக்க உணவு குழாய் அகற்றப்பட்டு சிறு குழாய் பொருத் தப்பட்டுள்ளது.

விரைவில் இந்த குழாயும் அகற்றப்பட்டு அதன் பிறகு பேச்சு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (10)

# 25 சதவீத பெண்களை நியமிப்பதில் ஆண் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தேசப்பிரிய

(கொழும்பு)

உள்ளூர் அதிகார சபைகளில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதில் சிக்கல் நிலவுவதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்கும் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள முறைப்படி அது சிக்கலான விடயமாக மாறியுள்ளதென்று அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் வெற்றி பெற்ற ஏனைய ஆண் பிரதிநிதிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையின் காரணமாக, குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கும் இடையில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## "தனிப்பட்ட கருத்துக்களே கட்சியின் கருத்தல்ல"

# மைத்திரி- ரணில் இணைந்த ஆட்சி தொடர வேண்டும்-திஸ்ஸ விருப்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து ஆட்சியைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட நிலைப்பாடு என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறைகள் இருப்பின் அவற்றை சரிசெய்து முன்னோக்கிச் செல்வதே சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் இருவருக்கும் பாரிய பொறுப்பு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்பொழுது ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக் களையே தெரிவித்து வருவதாகவும் இது தமது கட்சியின் கருத்து அல்லவெனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு அரசியல் நிலவரம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் பல்வேறு கருத்துக்கள் தொடர்பில் அவரிடம் வினவிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று வெள்ளிக்கிழமை விசேட அறிவிப்பொன்றை மேற்கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரம்; முன்னாள் சிரேஷ்ட DIG விளக்கமறியலில்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை சம்பவத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை மறைத்த குற்றச்சாட்டில் பிரசன்ன நாணயக்கார நேற்று முன்தினம் இரவு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவரை இன்று 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கல்கிஸை நீதவான் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹாய்ல் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (இ-7)



# ஸ்ரீல.சுதந்திரக் கட்சிக்கு கூட்டு எதிர்க்கட்சி ஆதரவு வழங்க தயார்-கம்மன்பில அறிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் புதிய பிரதமர் ஒருவரின் கீழ் அரசாங்கமொன்றை அமைக்குமாயின் அதற்கு ஆதரவு வழங்க கூட்டு எதிர்க் கட்சி தீர்மானித்துள்ளதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திலுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களில் கூடுதலான ஆதரவு பெற்ற ஒருவரை பிரதமராக நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### முதுகிற்குப் பின்னால் பேசுகிறவர்கள்!

முதுகிற்குப் பின்னால் யார் தான் பேசவில்லை? எல்லோரும் நம்மைப் பற்றிச் சிறிதளவேனும் மனக்குறையோடு குறிப்பிடவே செய்கிறார்கள்.

நம் அன்பிற்குரியவர்கள்; நம் மரியாதைக் குரியவர்கள்; நம்மை நம்பி வாழ்கிறவர்கள்; நம் தயவை நாடுகிறவர்கள் என்று எவருமே இதற்கு விதி விலக்காக இருக்க முடியாது.

ஒவ்வொருவருக்கும் நம்மைப் பற்றி ஏதேனும் இரண்டாவது கருத்து ஒன்று இருக்கத் தான் செய்கிறது. சிலர் அதை நம் காதுக்கு எட்டும்படி பேசுகிறார்கள். சிலர் அதைச் சாமர்த்தியமாகக் கடைசிவரை மறைத்தே வருகிறார்கள்.

இந்த உண்மைகளை நெஞ்சில் நிரந்தரமாக நிறுத்திக் கொண்டால் மற்றவர்கள் நம்மைப் பற்றித் தவறாக ஏதும் பேசியதாகக் கேள்விப்படும் போது நமக்கு அதிர்ச்சியோ வருத்தமோ, கோபமோ வராது.

என்னைப் பற்றி ஒரு நண்பர் ஏகமாய் மனக் குறையுடன் பேசியதாகக் கேள்விப்பட்டேன். உடனே அவரைப் பார்க்கப் போனேன். போய்ச் சண்டை போட்டேன் என்றா எண்ணுகிறீர்கள்? அதுதான் இல்லை.

பேச்சையும் நடவடிக்கைகளையும் காட்டும் பிரியத்தையும் பார்த்த போதும், இந்த முகமா என் முதுகிற்குப் பின்னால் பேசியது என்று ஐயம் வரும் அளவிற்கு இருந்தது.

மனிதர்கள் தாம் என்னமாய் நடிக்கிறார்கள்! குசல விசாரிப்புக்களை முடித்துக் கொண்டு அவர் சொன்ன ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் (எனக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாமல்) ஏன் அப்படி நேர்ந்தது என்று மிக இயல்பாக விளக்கிச் சொன்னேன்.

நண்பர், ஆமாமா! எல்லாம் சரிதான், என்று ஒரே சரணாகதி. பல மனிதர்களுக்குத் தீர்மானமான, தெளிவான கருத்து இருப்பதில்லை. நேரத்திற்கு ஒன்றைப் பேசுவது தோன்றியதையெல்லாம் சொல்வது என்று வைத்திருக்கிறார்கள்.

எனவே, இவர்கள் சொல்லும் கருத்துக்களுக்காக நாம் வருத்தமோ, கவலைப்படவோ வேண்டியதில்லை.

முதுகிற்குப் பின்னால் பேசுவது என்பது மனிதனின் தலையாய பலவீனம். இதற்குக் காரணம் இருக்கிறது. பாராட்டைத் தவிர முகத்திற்கு நேரே சொல்லப்படும் எந்தக் கருத்தையும் நாம் விரும்புவதில்லையே? அப்புறம் முதுகிற்குப் பின்னால் எப்படிப் பேசாமல் இருப்பார்கள்? மனிதர்களால் மற்றவர்களைப் பற்றிப் பேசாமல் இருக்கவே முடியாது.

இதில் இடைப்பட்டவர்கள் செய்யும் கெடுதல் வேலைகளும் உண்டு. அதிலும் வேண்டுமென்றே வார்த்தைகளையும் தொனியையும் தோரணையையும் மாற்றி ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கி விடுகிறார்கள் இவர்கள்.

நம்மைப் பற்றிச் சொல்லப்படும் விடயங்களில் உள்ள உண்மைகளை ஏற்றுக்கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்ளவும் உண்மை யற்றவற்றைப் புறக்கணிக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். எனவே இதற்காகவெல்லாம் நம் மன அமைதியை நாம் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**

# முடிவுகள் தாமதமானமைக்கு பொறுப்பேற்கத் தயார் மக்களுக்கு ஜனநாயகம் கிடைத்துள்ளது-தேசப்பிரிய

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த தேர்தலில் மக்களுக்கு ஜனநாயகம் கிடைத்துள்ளது. கடந்த காலங்களை விடவும் அமைதியாக முறைப்பாடுகள், குற்றங்கள் குறைந்த ஒரு தேர்தல் இடம்பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் தேர்தல் முடிவுகளில் தாமதம் ஏற்பட்டமைக்கு நான் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்கத்தயார் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எம்முடன் இணைந்து பணியாற்ற தமிழ் மொழி மூல அதிகாரிகள் இல்லாமை பாரிய நெருக்கடியெனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டமைக்கு தனிப்பட்ட காரணிகள் அல்லது சூழ்ச்சிகள் என எவையும் இல்லை. எனினும் தேர்தல் முடிவுகள் அனைத்தும் உரிய வட்டாரங்களுக்கு 12 மணியளவில் தெரிவிக்க முடிந்தது.

மக்களுக்கு பொதுவாக தெரிவிக்கும் செயற்பாடுகளில் சிக்கல்கள் ஏற்பட்டன. அதற்கு தேர்தல் தரவுகளை வெளியிடும் கணனிகளின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டன.

அதேபோல் எமக்கு இருக்கும் மிகப்பெரிய சிக்கலானது எமக்கான தமிழ் மொழிபெயர்ப்பு உதவியாளர்கள் இல்லாமையேயாகும். சிங்கள, தமிழ் மொழியில் நாம் கடமையாற்றும் நிலையில் சிங்கள மொழி செயற்பாடுகள் குறித்து விரைவாக செயற்பட முடிந்த போதும் தமிழ் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் கையாள எமக்கு போதிய தகுதியான நபர்கள் இல்லை.

ஆகவே மொழிபெயர்ப்பு செயற்பாடுகள் அனைத்தினையும் முன்னெடுக்கும் போது காலதாமதம் ஏற்படுகின்றது. இந்த விடயங்கள் குறித்து நாம் உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் தெரிவித்துள்ளோம்.

ஆனால் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனினும் இவற்றை காரணம் காட்டி நான் தப்பித்துக்கொள்ள தயாராக இல்லை. ஆகவே எல்லாவற்றின் பொறுப்பையும் நான் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக் கொள்கிறேன்.

தேர்தல் குறித்து சில முறைப்பாடுகள் இன்றும் பதிவாக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தினங்களில் மேலும் சில தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகும். எனினும் இவற்றில் ஏற்றுக்கொள்ள முடியாத ஆதாரமற்ற முறைப்பாடுகளும் உள்ளன. ஆயுதமேந்தி வந்த குழுவினர் வடக்கில் ஒரு பிரதேசத்தில் மக்களை அச்சுறுத்தியதாக முறைப்பாடு பதிவாகியுள்ளது. ஆனால் பாதுகாப்பு அதிகாரிகள் பொது மக்கள் இருந்த ஒரு வாக்குச்சாவடியில் அவ்வாறான சம்பவம் இடம்பெறுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது.

அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அங்கிருந்த அனைவருமே பொறுப்புக்கூற வேண்டும். எனினும் குறித்த முறைப்பாடு தொடர்பில் நாம் அவதானம் செலுத்தி வருகின்றோம். ஏனைய சாதாரண முறைப்பாடுகள் சிலவும் பதிவாகியுள்ளன. அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். முறைப்பாடுகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட நபர்கள் மீது குற்றம் உறுதியாகும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோன்று மார்ச் மாதம் 6 ஆம் திகதியே சபைகள் அமைக்கப்படவுள்ள நிலையில் பதவிவிலகும் நபர்கள் 6 ஆம் திகதியின் பின்னரே அவ்வாறு இராஜினாமா செய்ய முடியும். குறிப்பாக சுயேட்சைக் குழுக்களில் தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் அவ்வாறே விலக முடியும்.

நடைபெற்று முடிந்த தேர்தல் குறித்து மகிழ்ச்சியாகவும் அதே நிலையில் கவலையாகவும் உள்ளது. அமைதியான முறையில் தேர்தல் இடம்பெற்றுள்ளது, சில குற்றங்கள் இடம்பெற்றுள்ள போதிலும் கடந்த காலங்களை விடவும் நல்ல வகையில் மக்கள் ஜனநாயகத்தை உணரும் வகையில் தேர்தல் இடம் பெற்றுள்ளது.

சிலர் பொய்ப் பிரசாரங்களை செய்து எம்மை விமர்சித்த போதிலும் உண்மைகள் என்னவென்பது சகல அரசியல் கட்சிகளுக்கும் தெரியும். தேர்தல் முடிவுகளை வெளியிடும் நேரம் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் எம்முடன் இருந்தனர். நாம் சுயாதீனமாக செயற்படுவது அனைவருக்கும் தெரியும்.

எனினும் தேர்தலின் பின்னர் சில மோசமான சம்பவங்கள் இடம்பெற்று உயிரிழப்பு சம்பவங்கள் சில இடம் பெற்றமை வருத்தமளிக்கின்றன. எவ்வாறு இருப்பினும் மக்களுக்கு ஜனநாயகம் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அளுத்கம வன்முறைச் சம்பவத்தின் எதிரொலியே தேர்தல் தோல்வி

(கொழும்பு)

அளுத்கம வன்முறைச் சம்பவம் குறித்து விசாரிக்க தற்போதைய அரசு ஆணைக்குழு அமைக்காததற்குக் காரணம், சம்பவத்தின் சூத்திரதாரிகள் நல்லாட்சி அரசில் அங்கம் வகிப்பதே என, கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

மேலும், தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்குக் காரணம் யார் என்பது முஸ்லிம் மக்களுக்குத் தெரிந்திருக்கிறது.


அதுதான் நடைபெற்று முடிந்த தேர்தலில் அவர்கள் அளித்திருக்கும் முடிவு என்று கூட்டு எதிரணி நேற்று முன்தினம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் மாபெரும் வெற்றிக்குப் பின்னால் பொதுபல சேனா இருந்தது என்று ஒரு தவறான கருத்து மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது.

மேலும், கண்டி மற்றும் அகலவத்தை ஆகிய பகுதிகளில் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளிக்காத முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன.

எனினும் இவ்வாறான செய்திகளை மக்கள் தீர விசாரித்து உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் எனக் கூட்டு எதிரணி கேட்டுக்கொண்டுள்ளது. (இ-7)

## மீண்டும் சூடு பிடிக்கும் பிரியங்க விவகாரம்



(லண்டன்)

பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக போராட்டம் நடத்திய தமிழர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பாக லெஸ்டர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தன்று தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற, இழைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றத்திற்கு எதிராகவும், நீதி கேட்டும் அமைதியான வழியில் போராடிக்கொண்டிருந்த புலம்பெயர் தமிழ் மக்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இலங்கைத் தூதரக பாதுகாப்பு அதிகாரி பிரியங்க பெர்னாண்டோவிற்கு எதிராக புலம்பெயர் தேசங்களில் பல போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக லெஸ்டர் கிழக்கு பகுதி நாடாளுமன்ற உறுப்பினரான கீத்வஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழு - லெஸ்டர் பொறுப்பாளரான மனோ மற்றும் ரனித்தா தியாகேசு சந்தித்து பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கொலை மிரட்டலுக்கான ஆதாரங்களை சமர்ப்பித்ததுடன் இதற்கான நடவடிக்கையினை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

அதேவேளை தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறும் என்றும் இதற்காக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அரசியல் பிரிவு தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்தனர். (இ-7)

## தமிழில் பாடல் பாடி அசத்தும் மகிந்தவின் மகன் ரோஹித



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடைசி மகன், தமிழ் மொழியில் பாடல் பாடி அசத்தியுள்ளார்.

ரோஹித ராஜபக்ஷ பாடல் பாடி இசை அல்பங்களை வெளியிடுவதில் திறமையானவர்.

அவரால் இவ்வாறு பல பாடல்கள் வெளியிடப்பட்டு இணையத்தளங்களில் பிரபல்யமடைந்துள்ளன.

இந்நிலையில் முதல் முறையாக அவர் புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளார். தமிழ் மொழியில் பாடல் ஒன்றை பாடி வெளியிட்டுள்ளார்.

இந்தப் பாடல் தொடர்பில் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "நீண்ட காலமாக தமிழ் பாடல் ஒன்றை பாட வேண்டும் என்ற ஆசையில் இருந்தேன்.

இந்த பாடலை கேட்டுப் பாருங்கள். தமிழ் மொழி உச்சரிப்பில் குறைகள் இருந்தால் கோபப்படாதீர்கள். பரீட்சிக்கும் விதமாக இந்த வேலை செய்யப்பட்டது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## பொலிஸ் உத்தியோகத்தர் மீது மிகிந்தலையில் கடும் தாக்குதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரைக் கைது செய்ய முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் மிகிந்தலையில் இடம்பெற்றுள்ளது.

மஹாகனதராவ என்ற பகுதியைச் சேர்ந்த 53 வயது நபர், சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டிருந்ததாக மிகிந்தலை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கிடைத்தது.

அதையடுத்து குறித்த சந்தேக நபரைக் கைது செய்யு முகமாக நேற்று முன்தினம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் குறித்த சந்தேக நபரைக் கைது செய்ய முயற்சித்தபோது, சந்தேக நபர் திடீரென கையில் இருந்த போத்தலால் உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தினார். இதில் உத்தியோகத்தர் கடுமையான காயங்களுக்குள்ளானார்.

உடனே அவருடன் சென்றிருந்த ஏனைய உத்தியோகத்தர்கள் சந்தேக நபரை கைது செய்தனர்.

காயமடைந்த உத்தியோகத்தர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-7)

## ஆறு மாவட்டங்களில் வரட்சி 85ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வரட்சியினால் ஆறு மாவட்டங்களில், 85 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 71,962 பேர் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வரட்சியின் காரணமாக புத்தளம் மாவட்ட மக்களே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குருநாகல், அநுராதபுரம், பொலநறுவை, மன்னார் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் வரட்சியால் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஸ்ரீலங்கன், மிஹின் லங்கா மோசடிகளைக் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## மைத்திரி விடாப்பிடி

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா ஆகிய நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகளை கண்டறிவதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நியமனங்கள் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டன.



2006 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் திகதி முதல் 2018 ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெற்றதாகக் கருதப்படும் மோசடிகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்ன செயற்படவுள்ளதுடன் ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் எம்.டீ.ஏ. ஹரல்ட் மற்றும் இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. ஜே.கே. கீகனகே ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கிராண்ட்பாஸ் அனர்த்தத்துக்கு பிரதமர் ரணில் அனுதாபம்

(கொழும்பு)

கொழும்பு- கிராண்ட்பாஸ் பகுதியில் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்து 8 பேர் பலியான சம்பவத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

தன்னுடைய டுவிட்டர் வலைத்தளத்திலேயே இவ்வாறு அனுதாபம் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தேயிலை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்திரிகா வெளிநாடு பொய்ப் பிரசாரம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிநாடு சென்று விட்டதாக தெரிவித்து பொய்ப் பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாக முன்னாள் ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் தனது அதிகாரமிக்க அத்தனகல்ல பிரதேசத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படுதோல்வி அடைந்தார்.

இதன் காரணமாக விரக்தியடைந்த அவர், பிரித்தானியா நோக்கி பயணமாகியுள்ளதாக அண்மையில் ஊடகங்கள் ஊடாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## லஹிரு வீரசேகர சுகாதானந்த தேரர் விளக்கமறியலில்



(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவை மீறி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர மற்றும் பல்கலைக்கழக பிக்குகள் ஒருங்கிணைப்பாளர் தம்பிட்டியே சுகாதானந்த தேரர் ஆகியோரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வேறொரு வழக்கு நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த வேளையில் கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கு எலும்பியல் அறுவை சிகிச்சை உபகரணங்கள்

(கொழும்பு)

நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையின் தலைவர் வைத்தியர் அஜித் மெண்டிஸிற்கு டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஹான்ஸ் என்பவரால் வழங்கப்பட்ட எலும்பியல் அறுவைச் சிகிச்சை உபகரணங்களை அவ்வைத்தியசாலைக்கு கையளிக்கும் நிகழ்வு சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையில் இடம்பெற்றது.



குறித்த உபகரணங்கள் 100 மில்லியன் ரூபா பெறுமதியுடையவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசியல் ஸ்திரமற்ற நிலை பங்குச் சந்தையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலையடுத்து நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினால் பங்குச் சந்தையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர் அஜந்த சிறிமான்ன தெரிவித்துள்ளார். அரசியல் ஸ்திரமற்ற நிலைமையின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சந்தேகத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனைச் சீர்செய்ய அரசியல் ஸ்திரத்தன்மையொன்றுக்காக அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## நிப்பொன்மாரு கப்பல் சுற்றுப் பயணத்தில் இலங்கை வந்த இளைஞர் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

உலக நட்புறவு நிப்பொன் மாரு கப்பல் சுற்றுப் பயண நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ள இளைஞர், யுவதிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

இலங்கை உட்பட 11 நாடுகளைச் சேர்ந்த 242 இளைஞர், யுவதிகளின் பங்குபற்றுதலுடன் நிப்பொன்மாரு கப்பல் சுற்றுப் பயண நிகழ்ச்சித்திட்டம் இலங்கை, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் இராஜதந்திர மட்டத்தில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஜப்பான் நாட்டின் அமைச்சரவை அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த உலக நட்புறவு கப்பல் சுற்றுப் பயணம் கடந்த ஜனவரி 29ஆம் திகதி ஜப்பானில் ஆரம்பமானதுடன், கடந்த 7ஆம் திகதி இக்கப்பல் மூன்று நாட்கள் இந்தியாவில் நங்கூரமிட்டு 13 ஆம் திகதி மீண்டும் தனது பயணத்தை ஆரம்பித்து நேற்று இலங்கையை வந்தடைந்தது.

இலங்கையில் நடைபெறும் பல்வேறு இளைஞர் நிகழ்ச்சித் திட்டங்களின் பின்னர் இக்கப்பல் நாளை 17ஆம் திகதி பிற்பகல் மீண்டும் ஜப்பான் நோக்கி பயணமாகும்.

இளைஞர், யுவதிகள் மத்தியில் கலாசார, சமூக மற்றும் அரசியல் ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்புதல், தலைமைத்துவ பயிற்சியை வழங்குதல் ஆகியவை இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த இளைஞர் பிரதிநிதிகளை ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன், அவர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார். (இ-7)

# மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுத்தால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரிக்கும்

## டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் நலத்திட்டங்களை யார் முன்னெடுத்தாலும் அவர்களை வெளியில் இருந்து ஆதரிக்க ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தயாராக இருக்கின்றது என கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டந்திலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஒரு சில சபைகளை தவிர ஏனைய சபைகளில் எந்தவொரு கட்சியும் தனிப் பெரும்பான்மை பெறுவது கடினமானதாகக் காணப்படுகின்றது.

ஆனாலும் ஊர்காவற்றுறை பிரதேச சபையையும் நெடுந்தீவு பிரதேச சபையையும் எமது கட்சி பெரும்பான்மையுடன் வெற்றிகண்டுள்ளது.

இதனால் இப்பகுதிகளில் யாருடனும் நாம் கூட்டுச் சேரவேண்டிய நிலை இருக்கப்போவதில்லை. ஆனாலும் வடக்கு-கிழக்கிலுள்ள ஏனைய சபைகளில் பூநகரி பிரதேச சபையை தவிர்ந்த ஏனைய சபைகளில் யாரும் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய வகையில் மக்கள் அங்கீகாரம் வழுங்கவில்லை.

எனவே பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற எந்தக் கட்சியானாலும் அங்கு ஆட்சி அமைக்க முடியும். அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில் மக்கள் நலத்திட்டங்களை யார் முன்னெடுத்தாலும் அதை ஆதரிப்பதற்கு எமது பொதுச் சபைக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானமானது நாம் எமது தனித்துவத்தை பேணும் வகையிலும் மக்கள் நலன்களை முன்னிறுத்தியதாகவுமே இருக்கும்.

யாழ். மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட், வேறு சில பொது அமைப்புகள் என கூட்டுச்சேர்ந்து பெற்றுக்கொண்ட ஆசனங்களை விட நாம் தனியொரு கட்சியாக நின்று 81ஆசனங்களைக் கைப்பற்றி தனிப் பெரும் கட்சியாக எம்மை வெளிப்படுத்தியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே வடக்கு-கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 99 ஆசனங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முத்து சிவலிங்கத்துக்கு பிரதியமைச்சர் பதவி



(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம், சிறு மற்றும் ஆரம்ப கைத்தொழில் பிரதி அமைச்சராக நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி முன்னிலையில் அவரது பதவிப் பிரமாணம் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் 2018ஆம் ஆண்டு பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நாளை மறுதினம் மு.ப. 10 மணிக்கு சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் இணுவில் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஆனைக்கோட்டை வராகி அம்மன் கோவிலடிக்கு அருகிலுள்ள அரைக்கும் ஆலை முன்றலில் நேற்று முன்தினம் காலை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தை சேர்ந்த சின்னத்துரை யோகேஸ்வரன் (வயது - 84) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். குறித்த குடும்பஸ்தர் மனைவியை பிரிந்து தனியாக வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் இவரது சடலத்தை கண்ட அப்பகுதி மக்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டு, யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைத்துள்ளனர். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1331

Search for people, places and things — Nagendram Home

### சிம்ஜான்


Bed Coffeeயோட கணவனை எழுப்புற காட்சிய சினிமாவில யாத்துட்டு



உண்மையினு நம்பி கல்யாணம் பண்ணி கடைசியில பால் வாங்கிறதே நாம தான்!

### சரோன்

ஒப்பரேசன் முடியுற வரைக்கும் நீ அரிசியே சேர்க்கக்கூடாது... ஒப்பரேசனுக்கு அப்புறம் பாக்டர்



உங்க சொந்தக்காரங்களே போடுவாங்கய்யா!

### சரவணன்

ஆசிரியர்: மயிலுக்கும் கிளிக்கும் என்ன வித்தியாசம்



மாணவன்: மயில் இந்தியாவின் தேசிய பறவை... கிளி இந்தியாவின் ஜோசியப் பறவை சேர்...

### சஞ்சுதன்

உடற்பயிற்சியே இல்லாமல் உடல் எடை குறைய வேண்டுமா?



உடன் ஒரு பட்டப்படிப்பை முடிக்கவும்

### சதீசன்

அலுவலகத்தில மனேஜர் லீவு போட்டா நமக்கு வாற சந்தோஷம் இருக்கே...



நாமலே லீவு போட்டாகூட வராது....

### சபேசன்

ஆசிரியர்: உலகம் ஒரு நாடக மேடை... அதில் நாமெல்லாம் நடிகர்கள்...



மாணவன்: அப்படின்னா எனக்கு ஜோடியா தமன்னாவைப் போடுங்க சேர்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாகலவை போட்டுக் கொடுத்த மைத்திரி

# என் குடும்பத்துடன் விளையாடியவர்களை என்ன செய்கிறேன் பார் - மகிந்த மிரட்டல்

(கொழும்பு)

கடந்த காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக செயற்பட்ட அரசியல்வாதிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆளும் தரப்பிலுள்ள பீடத்திலுள்ள ஒருவருடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது இந்த எச்சரிக்கை விடுத்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை ஒன்றிணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையிலான குழுவினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த தயாசிறி ஜயசேகர, திலங்க சுமத்திபால மற்றும் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த நாமல் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கலந்து கொண்டனர். ஜனாதிபதியுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, நாமல் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார்.



"ஜனாதிபதி அவர்களே என்னை கைது செய்தது பரவாயில்லை. ஏன் எனது தம்பி யோஷிதவை கைது செய்தீர்கள்...?" என வினவியுள்ளார்.

"எனக்குத் தெரியாது. அந்த அமைச்சின் அதிகாரம் என்னிடம் இல்லை. அது பிரதமரிடம் தான் உள்ளது" என ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

"அப்படி என்றால் எனது தம்பியை கைது செய்ததற்கும் உங்களும் எந்தத் தொடர்பும் இல்லையா?" என நாமல் வினவியுள்ளார்.

அந்தச் சம்பவம் தொடர்பில் தனக்கு ஒன்றும் தெரியாதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, சாகல ரத்நாயக்கவிடமே உள்ளது. அதன் செயற்பாட்டுடன் நான் தொடர்புபடவில்லை. அழுத்தம் பிரயோகிக்கவும் இல்லை" என ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அந்த சந்தர்ப்பத்திலேயே மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பொன்று மேற்கொண்டுள்ளார். "நான் ஜனாதிபதியுடனே உள்ளேன். யோஷிதவை கைது செய்தமைக்கும், ஜனாதிபதிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என அவர் கூறினார். அனைத்தையும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தான் செய்துள்ளார்" என நாமல் குறிப்பிட்டுள்ளார்.

"சரி.. சரி..! எனது மகனை கைது செய்தவர்களை நான் பார்த்துக் கொள்கின்றேன்" எனக் கூறி விட்டு மகிந்த தொலைபேசியைத் துண்டித்துள்ளார் என குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் மகிந்த தரப்பினருக்கு மக்கள் வழங்கிய பாரிய ஆதரவினை அடுத்து மகிந்தவின் எச்சரிக்கை வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைவசமயம் சார்ந்த மக்களை ஓரங்கட்ட மன்னாரில் திட்டமிட்டு சதி நடவடிக்கை

## கலாநிதி ஆறு.திருமுருகன் மனவேதனை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் சைவ சமயத்தவர்களின் புனிதமான வழிபாட்டுச் சின்னங்களை அழித்து சைவசமயம் சார்ந்த மக்களை ஓரங்கட்ட நினைப்பவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ள தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், மக்கள் பிரதிநிதிகள் இவ் விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில்,

மன்னாரில் சைவசமயத்தவர்களின் புனிதமான வழிபாட்டுச் சின்னங்களை அழித்து வருவது குறித்து மிகுந்த வேதனை அடைகின்றேன்.



தொடர்ச்சியாக மூன்றாவது தடவை இத் துன்பகரமான செயற்பாடு மன்னாரில் இடம்பெற்றுள்ளது. இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதி, வடமாகாண முதலமைச்சர், பாராளுமன்ற பிரதிநிதிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

சைவ மக்களின் பிரதான வழிபாட்டு நாளாகிய சிவராத்திரி நாளில் இத்துன்பமான செய்தி மக்களை வருத்தியுள்ளது. மன்னாரில் சைவசமயம் சார்ந்த மக்களை ஓரங்கட்டுவதற்கு யார் காரணம் என்பதை உடன் கண்டறிய வேண்டும். சைவ மக்களின் தொன்மைச் சிறப்பு மிக்க மன்னார் மாவட்டத்தின் மாண்பைக் காக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-9)

# தேர்தல் பற்றி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் '' உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒரு கண்ணோட்டம்'' பற்றிய கலந்துரையாடல் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

# ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜெயந்தி தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி தினம் நாளை 17ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.உரும்பிராய் சந்தி இல.17, மருதனார் மடம் வீதி, இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக ஸ்டெர்லிங் நிறுவன நிர்வாக இயக்குநரும் லண்டன் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக இணைய இயக்குநருமான லோகபிரதாபன் கலந்து கொள்வார். (இ-7)

# திருமலை வைத்தியசாலை அருகில் பண்டைய கால பீரங்கிப்பாகம் மீட்பு

(திருமலை)

திருகோணமலை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள நிலத்தில் இருந்து பண்டைய காலத்துப் பீரங்கி ஒன்றின் பகுதி மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அவசர விபத்து பிரிவுக்கு புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க அத்தியாரம் கட்டுவதற்காக நேற்று நிலத்தை தோண்டியுள்ளனர்.



இதன்போது பண்டைய காலத்துப் பீரங்கி ஒன்றின் பகுதி கிடைத்துள்ளது.

இந்தப் பீரங்கி குறித்து பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அங்கு சென்ற துறைமுக பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஜகத் அமரவங்ச தலைமையிலான குழுவினர், அதனை ஆராய்ந்த பின்னர், இது குறித்து தொல்லிய திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

10 அடி நீளமான இந்தப் பீரங்கி காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துறைமுக நகரான திருகோணமலை பண்டைய காலத்தில் தமிழர் ஆண்ட காலப்பகுதியில் தலைநகராக இருந்து வந்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

# எண்ணெய் ஏற்றுமதியை கட்டுப்படுத்த சவுதி முடிவு

(கொழும்பு)

எண்ணெய் சந்தையை மறுசீரமைப்பதற்காக கச்சா எண்ணெய் தயாரிப்பாளர்கள் நடப்பாண்டு முழுவதும் உற்பத்திக் குறைப்புக்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என சவுதி அரேபிய எரிசக்தி அமைச்சர் காலித் அல்-பலிஹ் கேட்டுக் கொண்டுள்ளார்.

றியாத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ரஷ்ய எரிசக்தி அமைச்சருடனான சந்திப்பின் போது காலித் அல்- பலிஹ் இதனைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இருநாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போது, எரிசக்தி ஆற்றல் துறையில் நெருக்கமான ஒத்துழைப்புக்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி குறித்த கவலைகளுக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெயை முழுமையான அகற்றும் முயற்சியில் ஒபெக் ஈடுபட்டுள்ளது.

அதற்கேற்ப குறைந்த உள்நாட்டு தேவை மற்றும் ஒபெக் அழுத்தங்களுக்கு மத்தியில் எண்ணெய் ஏற்றுமதியை மார்ச்சில் கட்டுப்படுத்தவுள்ளதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# கூட்டுறவு கிராமிய வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு கிராமிய வங்கி திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.45 மணியளவில் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க (வ-து) தலைவர் எஸ். சத்தியநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்க பதிவாளரும் கூட்டுறவு ஆணையாளருமான பொ.வாகீசன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.மோகன், கௌரவ விருந்தினராக தலைவரும் ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான கு.அருந்தவநாதன், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சியாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# நீச்சல் தடாகத்தில் விழுந்த வெளிநாட்டுப் பெண் மரணம்

(கொழும்பு)

கொஸ்கொடை இந்துருவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில், கசகஸ்தான் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 அளவில் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்தார். தடாகத்திலிருந்து வெளியே வந்த அவர், வழுக்கி விழுந்து காயமடைந்துள்ளார். இதனையடுத்து விடுதி நிர்வாகிகள், பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் உயிரிழந்துள்ளார். (இ-7)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2018-14.03.2018






## நிதானம் தேவை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உத்தியோகம்

அலுவலகப் பணிகளில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையும். மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். இலாகா மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் திருப்திகரமாக அமையாது. புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பங்குச்சந்தையில் அதிக முதலீடு செய்ய வேண்டாம்.

உடல்நலம்

சுக ஸ்தானாதிபதி புதன் விரயாதிபதி சுக்ரனோடு இணைந்து சஞ்சரிப்பதால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மனக்குழப்பம் அதிகரிக்கும். அடிக்கடி மருத்துவர்களை மாற்றாதீர்கள்.

குடும்பம்

குடும்ப வாழ்வில் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். வீடு, மனை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்தால் தடைகள் அகலும்.

பணவரவு

தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். பழைய கடனைக் கொடுத்தாலும், புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். 7,10இற்கு அதிபதியான குரு பகவான், மாதத் தொடக்கத்தில் ஜீவன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், வாழ்க்கைத் துணைக்கு உத்தி யோகம் கிடைத்து வருமானம் வரக்கூடும்.

விருச்சிக குரு

மாதத் தொடக்கத்தில் குரு பகவான், 6ஆம் இடத்திற்குச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே குடும்பச்சுமை குறையும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். மார்ச் 7ஆம் திகததி குரு வக்ரம் பெறும் பொழுது எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

மீன புதன்

பெப்ரவரி 27ஆம் திகதி மீன இராசிக்கு செல்லும் புதன் அங்கு நீச்சம் பெற்று வலிமையிழக் கிறார். இது அவ்வளவு நல்லதல்ல. முயற்சியில் தடை, முன்னேற்றத்தில் பாதிப்பு உருவாகும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

மீன சுக்ரன்

மார்ச் 3ஆம் திகதி உங்கள் இராசிக்கு 5,12இற்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெறுகிறார். பாக்யாதிபதி உச்சம் பெறுவது நன்மை தான் என்றாலும், விரயாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் இக்காலத்தில் சுப விரயங்களைச் செய்யலாம்.

தனுசு செவ்வாய்

மார்ச் 10ஆம் திகதி தனுசு இராசிக்குச் செவ்வாய் செல் கிறார். அங்குள்ள சனியோடு அவர் இணைவதால் போராட்டமான வாழ்க்கை உருவாகும். குடும்பப் பிரச்சினை கொடிகட்டிப் பறக்கும். விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் நேரம் இது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

சிந்தித்து செயற்பட வேண்டிய மாதம் இது. உடல்நலத்தில் அடிக்கடி பாதிப்பு ஏற்படலாம். உறவினர்களிடமும், கணவன் - மனைவிக்குள்ளும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. விலை உயர்ந்த பொருட்களை கையாளும் பொழுது கவனம் தேவை.

கலைத்துறை

சுக்ரபலம் நன்றாக இருப்பதால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முன்னேற்றம் கூடும். மாதத்தின் மையப்பகுதியில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

அரசியல்

பொதுநலத்தில் உள்ளவர்கள் பிறர் மனம் நோகும் வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது. மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். பொறுப்புகள் வருவது போல் தோன்றினாலும் தாமதம் ஏற்படும்.

பொதுப்பலன்

இந்த மாசி மாதத்தில் கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், குடும் பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தடுமாற்றங்கள் ஏற்படும். கேட்கும் இடத்தில் உதவிகள் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உறவினர்கள் வழியில் மனக்கசப்பு உண்டாகலாம்.

எதிர்பார்த்த காரியங்களில் ஏமாற்றமும், எதிர்பாராத சில காரியங்களில் முன்னேற்றமும் குரு பார்வையால் கிடைக் கப் போகிறது. ஆரோக்கியத் தொல்லையால், சில முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இயலாமல் போகலாம். ஏதாவது ஒரு வழியில் விரயங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஒருசில காரியங்களை பெரும் முயற்சிக்குப் பின் முடிப்பீர்கள்.

தொழில் மாற்றச் சிந்தனை தலை தூக்கும். சுபகாரியப்பேச்சுகள் முடிவடைவது போல் இருந்து கைநழுவிப் போகலாம். ஆடம்பரச் செலவுகளை குறைப்பதன் மூலம் கடன் சுமை குறையும். மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய மாதம் இது.




## ராஜ யோகம்!

உத்தியோகம்

அலுவலகப் பணியில் ஏற்பட்ட அல்லல்கள் அகலும். பணிநிரந்தரம் பற்றிய நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் புரிபவர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிய கிளைத் தொழில் தொடங்கும் சிந்தனை உருவாகும். 8இற்கு அதிபதி சனி 6இல் இருப்பதால் பங்குச்சந்தையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நற்பலன் கிடைக்கும்.

உடல்நலம்

ஆயுள்காரகன் சனி 6இல் இருப்பது யோகம்தான். ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். இருமல் நோயாலும், இதய நோயாலும், சரும நோயாலும் அவதிப்பட்டவர்கள் இனி குணமடைவர்.

குடும்பம்

குடும்ப வாழ்வில் குதூகலம் கூடும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். பாகப்பிரிவினைகளை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். ஜென்மத்தில் இராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால், சர்ப்ப சாந்தி பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்ள இயலும்.

பணவரவு

வருமானம் போதுமானதாக இருக்கும். தனாதிபதி சூரியன் 8இல் இருந்தாலும், தனஸ்தானத்தை அது பார்ப்பதால் தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். ஸ்தம்பித்து நின்ற தொழில் வெற்றி நடைபோட்டு, அதிக இலாபத்தைக் கொடுக்கலாம்.

விருச்சிக குரு: பெப்ரவரி 14ஆம் திகதி விருச்சிகத்திற்கு குரு செல்கிறார். அப்பொழுது அவரது பார்வை 9,11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பெற்றோர் வழி ஆதரவு உண்டு. மார்ச் 7ஆம் திகதி குரு வக்ரம் பெறுவதால் உத்தியோக உயர்வு உண்டாகலாம்.

மீன புதன்

பெப்ரவரி 27ஆம் திகதி மீன இராசிக்கு செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 3,12இற்கு அதிபதி வலிமை இழப்பதால் சகோதர சச்சரவுகள் தலை தூக்கும். வெளிநாட்டில் உள்ள வர்கள் சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை உருவாகும். வழக்குகளில் பலன் கிடைப் பது அரிது.

மீன சுக்ரன்

மார்ச் 3ஆம் திகதி உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், 9ஆம் இடமான மீனத்திற்கு செல்கிறார். அங்கு சுக்ரன் உச்சம் பெறுவதால் அச்சமில்லாத வாழ்க்கை அமையும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். ஒரு சிலருக்கு வீடு வாங்கும் அமைப்பு உண்டு.

தனுசு செவ்வாய்

மார்ச் 10ஆம் திகதி தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அங்கு ஏற்கனவே சஞ்சரிக்கும் சனியோடு செவ்வாய் இணைவதால், பூர்வீக சொத்துத் தகராறுகள் தலை தூக்கலாம். பிள்ளைகளின் குணத்தில் மாறுபாடு ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் உடனடியாக முடிக்க இயலாது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

உறவினர்களின் பாசமும், நேசமும் அதிகரிக்கும். மனச்சுமை குறையும். பணப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். கணவன்-மனைவி உறவு பலப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

கலைத்துறை

மீனத்தில் புதன் நீச்சம் பெற்றும், சுக்ரன் உச்சம் பெற்றும் நீச்ச பங்க ராஜயோகம் ஏற்படுவதால் உங்கள் படைப்புகளுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும். புகழ்மிக்க ஒருவரின் நட்பு பயன்தரும்.

அரசியல்

பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். மேலிடத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள். அதன் மூலம் ஆதாயம் அதிகரிக்கும்.



பொதுப்பலன்

உங்கள் இராசியை மாசி மாதத் தொடக்கத்திலேயே குரு பார்க்கப் போகிறது. எனவே சென்ற மாதத்தில் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். பணப்பற்றாக்குறை அகலும். பாக்கிகள் வசூலாகும். தேக்க நிலை மாறி தெளிவு பிறக்கும். வாழ்க்கைச் சக்கரம் ஓட, நீங்கள் எடுத்த முயற்சி அனைத்தும் பலன் தரும் நேரம் இது. எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அதன் மூலம் வரும் லாபத்தைக் கொண்டு அடுத்த தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

காலா காலத்தில் நடைபெற வேண்டிய கல்யாணம் காலதாமதம் ஆகிக் கொண்டிருக் கிறதே என்ற கவலை நீங்கப் போகிறது. பிள்ளைகளின் மண விழாக்கள் மட்டுமல்லாமல் பெற்றோர்களின் மணி விழா, முத்து விழா, பவள விழா போன்ற விழாக்களும், குல தெய்வப் பிரார்த்தனைகளும் நடைபெறும். புதிய வாகனங்கள் வாங்க முயற்சி செய்வீர்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உயிர்கள் மீது அன்பு செலுத்துங்கள்



அது கடுமையான கோடை காலம். கொளுத்தும் வெயிலில் ஒரு வழிப்போக்கர் நடந்து கொண்டிருந்தார். வெயிலின் கடுமையை அவரால் தாள முடியவில்லை. நாக்கு வறண்டு தாகம் உயிரை எடுத்தது.

அவர் தண்ணீர் தேடி அங்கும், இங்குமாய் அலைந்தார். வெகு சீக்கிரத்திலேயே ஒரு கிணற்றையும் கண்டார். ஆனால், அந்தக் கிணற்றில் தண்ணீர் இல்லை. வறண்டு கிடந்தது. மறுபடியும் தண்ணீருக்காக அலைந்தார். தொலைவில் ஒரு கிணறு தெரிந்தது. அதன் அருகில் ஓடினார். ஆனால், அதுவும் வறண்டிருந்தது. மீண்டும் தண்ணீரைத் தேடி அலைந்தார்.

இறுதியில் தண்ணீர் உள்ள ஒரு கிணறையும் கண்டு பிடித்துவிட்டார். ஆனால், தண்ணீர் கிணற்றின் ஆழத்தில் இருந்தது. அத்துடன் நீரை இறைக்க வாளியோ, கயிறோ எதுவும் இல்லை. கடைசியில், வேறு வழியில்லாமல் ரொம்பவும் சிரமப்பட்டுக் கிணற்றில் இறங்கினார். உள்ளே வெயிலின் கடுமை இல்லை. தண்ணீரும் ஜில்லென்று குளிர்ச்சியாக இருந்தது.

இரு கரங்களால் தண்ணீரை அள்ளி தாகம் தீரக் குடித்தார். அதன் பிறகுதான் அவருக்கு உடலில் தெம்பு பிறந்தது. இறைவனுக்கு நன்றி செலுத்தியவர் கிணற்றிலிருந்து வெளியே வந்தார்.

நாயின் முனகல்

கிணற்றின் பக்கத்தில் ஒரு நாய் நின்றிருந்தது. வெயிலின் கொடுமையைச் சமாளிக்க முடியாமல் நாக்கைத் தொங்கப் போட்டு மூச்சிரைக்கத் தவித்துக்கொண்டிருந்தது. கிணற்றைச் சுற்றியிருந்த மணலைக் கால்களால் பிராண்டியது. மணலின் அடிப்பகுதியில் இருந்த ஈரத்தை நக்கியது. தாகம் அடங்காமல் பலவீனமான குரலில் முனகியது.

இந்தக் காட்சியைக் கண்டதும் வழிப்போக்கரின் உள்ளம் இளகிவிட்டது. "ஐயோ பாவம்! வாயில்லாத ஜீவன்! தண்ணீர் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் தண்ணீர் கிடைக்காவிட்டால் நாய் நிச்சயமாக செத்துவிடும்!" என்று கருதினார்.

நாயை இரக்கத்துடன் பார்த்தார். கிணற்றில் மீண்டும் கஷ்டப்பட்டு இறங்கினார். தண்ணீரை மொண்டு மேலே கொண்டு வருவது எப்படியென்று கொஞ்ச நேரம் யோசித்தார்.

பின்பு ஒரு திட்டத்துடன் காலில் மாட்டியிருந்த தோலால் ஆன காலுறைகளைக் கழற்றினார். இரண்டு காலுறைகள் நிரம்பத் தண்ணீரை நிரப்பினார். அவற்றை வாயில் கவ்விக் கொண்டு கிணற்றிலிருந்து மெதுவாக வெளியே வர ஆரம்பித்தார்.

அது அவ்வளவு எளிதாக இல்லை. தண்ணீர் நிரம்பிய காலுறை கனத்தது. வாயும், பல்லும் வலித்தது. பேசாமல் முயற்சியைக் கைவிட்டு விடலாமா? என ஒரு கணம் தோன்றியது. ஆனால், மனக் கண்ணில் தாகத்தால் தவிக்கும் நாய் தெரிந்தது. கஷ்டத்தை மறந்து, பெருமுயற்சி எடுத்து ஒருவாறு ஏறி கிணற்றிலிருந்து வெளியே வந்துவிட்டார்.

கிணற்றருகே அமர்ந்து, முதல் காலுறை நீரை நாய்க்குப் புகட்டினார். நாய் மகிழ்ச்சியுடன் தண்ணீரை நக்கி நக்கி குடிக்க ஆரம்பித்தது. உயிரைக் காத்ததற்கு அடையாளமாக நன்றியுணர்ச்சியுடன் வாலை ஆட்டியது. ஒரு சொட்டுத் தண்ணீரையும் பாக்கி வைக்காமல் இரண்டு காலுறை நீரையும் அது குடித்து முடித்தது. அவ்வளவு தாகம் அதற்கு!

வழிப்போக்கரின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. நாயின் தாகத்தைத் தீர்த்த மகிழ்ச்சியுடன் அவர் நடக்க ஆரம்பித்தார்.

வழிப்போக்கரின் இந்த செயல் இறைவனுக்குப் பிடித்துப் போனது. சக உயிரினமான நாயிடம் அவர் காட்டிய கருணையால் இறைவன் அவருடைய பாவங்களை மன்னித்தான். அவருக்குச் சொர்க்கம் வழங்கினான்.

நபிகளார் படிப்பினை மிக்க இந்தக் கதையைச் சொல்லி முடித்தார்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த தோழர்களில் ஒருவர், "இறைவனின் தூதரே! நாம் உயிரினங்களிடம் நல்லவிதமாக நடந்துகொண்டால், இறைவன் நம் பாவங்களை மன்னிப்பானா?" என்று சந்தேகம் கேட்டார்.

"நிச்சயமாக! உயிரினங்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்வோருக்கு இறைவன் அருள்மாரி பொழிவான்" என்று நபிகளார் பதிலளித்தார்.





## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1568-நெதர்லாந்தின் அனைத்து மக்களுக்கும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினரால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1646- இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர் டெவன் நகரில் இடம்பெற்றது.
- 1796- ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்காரரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1918- லித்துவேனியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1945- இரண்டாம் உலகப் போர். முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் டோக்கியோவைத் தாக்கியது.
- 1959-ஜனவரி 1 இல் புல்ஜென்சியோ பட்டிஸ்டாவை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைவரானார்.
- 1988- சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி விஜய குமாரதுங்க கொழும்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

- 1909- மு. நவரத்தினசாமி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர் (இ. 1969)
- 1934- தெளிவத்தை ஜோசப், ஈழத்து எழுத்தாளர்
- 1945- இல. கணேசன், தமிழக அரசியல்வாதி

### இறப்புகள்

- 1656- தத்துவ போதக சுவாமிகள், கத்தோலிக்கக் குரு, தமிழ்நாட்டில் சமயப் பணி ஆற்றியவர் (பி. 1577)
- 1954- டி.கே. சிதம்பரநாத முதலியார், தமிழக எழுத்தாளர், வழக்கறிஞர் (பி. 1882)
- 1956- மேகநாத சாகா, இந்திய வானியற்பியலாளர் (பி. 1893)
- 1988- விஜய குமாரதுங்க, சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி (பி. 1945)
- 2016- புத்துரசு புத்துரசு காலி, எகிப்திய அரசியல்வாதி, ஐ.நாவின் 6 ஆவது பொதுச் செயலர் (பி. 1922)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (லித்துவேனியா, 1918)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 | 80 |
| தக்காளி | 40 | 40 | 60 | [illegible] |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 40 |
| கோவா | 50 | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 100 | 120 | 150 |
| பூசணி | 60 | 30 | 60 | 50 |
| புடோல் | 100 | 100 | 150 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 200 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 150 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 200 |
| பீற்றூட் | 40 | 50 | 80 | 130 |
| கறிமிளகாய் | 150 | 100 | 160 | 120 |
| முருங்கைக் காய் | 400 | 200 | 600 | 800 |
| இஞ்சி | 80 | 100 | 120 | 160 |
| கத்தரித்தம்பள்ள | 50 | 30 | — | 50 |
| கீரை-1பிடி | 30 | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 20 | 10 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 60-90 | 75 | 75-100 |
| இராசவள்ளி | 160 | 150 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 80 | 30-40 | 120 | 120 |
| முள்ளங்கி | 20 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 10 | — | 100 |

ஒரு பத்திரிகையின் நான்கு பகுதி; உரிமைகள், உண்மையாக இருக்கக்கூடியவை, சாத்தியக்கூறுகள், நான்காவது பொய் அறிக்கைகளுக்கு.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# லெற்றர் ஹெற் சங்கங்கள் இல்லாதொழிக!

தமிழினம் அனுபவித்த துன்ப துயரங்களுக்குப் பாவம் எழுதி கணக்கிட்டு அந்தப் பாவத்தை சம்பந்தப்பட்டவர்களுக்குப் பகிர்ந்து வழங்கினால் லெற்றர் ஹெற் சங்கங்களுக்கு கணிசமான அளவு கிடைக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

யாரும் எவரும் தனி மனிதராக நின்று சங்கம் அமைக்கலாம். தேவை ஏற்படும்போது அறிக்கை விடலாம் என்ற சூழ்நிலை எம் இனத்துக்குப் பேராபத்தை விளைவிக்கப் போகிறது என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

சங்கங்கள் என்றால் அவற்றுக்கு தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினர்கள் என்ற ஒரு கூட்டமைப்பு இருக்க வேண்டும்.

ஆனால் வட புலத்தில் லெற்றர் ஹெற் சங்கங்கள் தாராளமாக உள்ளன.

அந்தச் சங்கங்களின் பெயரைப் பாவித்து தனி மனிதர்கள் தங்களின் விருப்பு வெறுப்புக்களை அறிக்கையாக்கி எம் மக்களை ஏமாற்ற முற்படுகின்றனர்.

ஊடகங்களும் குறித்த அறிக்கை தமக்குச் சாதகமென்றால் அவற்றைப் பிரசுரிப்பது இல்லையென்றால் தூக்கி எறிந்து விடுவது என்ற நடைமுறையைப் பின்பற்றுகின்றன.

இதனால் லெற்றர் ஹெற் சங்கங்களின் அறிக்கைகள் ஏதாவது ஒரு ஊடகத்திலாவது இடம்பெற்று விடுகிறது.

உண்மையில் ஒரு சங்கம் அறிக்கை விடுவதாக இருந்தால், அது தனது நிர்வாக சபையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி அறிக்கை தயாரித்து அதில் தலைவர், செயலாளர் கையொப்பமிட வேண்டும்.

அறிக்கை விமர்சனத்துக்குட்படக்கூடாது என்றால்; விடப்படும் அறிக்கை நம்பகத்தன்மை மிகுந்ததாக இருக்க வேண்டும் எனக் கருதினால் தலைவர், செயலாளருடன் நிர்வாக சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கையொப்பங்களையும் அறிக்கையில் சேர்த்துக் கொள்வது நல்லது.

இதைவிடுத்து நிர்வாக சபைக்குத் தெரியாமல், எழுந்தமானமாக அறிக்கை விடுவது, அந்த அறிக்கையை ஊடகங்களில் பிரசுரிப்பதும் ஆரோக்கியமான செயலன்று.

எனவே ஊடகங்கள்; சங்கங்கள், பொது அமைப்புக்களின் அறிக்கைகளைப் பிரசுரிப்பதற்கு முன்னதாக, அந்த அறிக்கைகளின் கனம் சூத்திரம் பற்றியும், அந்த அறிக்கையில் தலைவர், செயலாளர்களின் ஒப்பம் இருக்கிறதா? என்றும் குறித்த அறிக்கையை வெளியிடுவது தொடர்பான நிர்வாக சபைக் கூட்டத்தின் ஒப்புதல் கடிதம் உள்ளதா? என்று ஆராய்ந்து அறிக்கையைப் பிரசுரித்தால் மட்டுமே, லெற்றர் ஹெற் சங்கங்களின் உருவெடுப்புக்களைத் தடுக்க முடியும்.

இதைச் செய்யாத சந்தர்ப்பத்தில், எத்தனையோ சங்கங்கள், பொது அமைப்புக்கள் புற்றீசல் போல தோன்றி சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளும்.

# தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்தும் விசமச் செயல்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்

(மன்னார்)

இந்து ஆலயங்கள் மற்றும் தெய்வ விக்கிரகங்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் இந்நாட்டில் வாழும் இந்து மக்களை மிகவும் வேதனை கொள்ளச் செய்துள்ளது.

இந்துக்கள் மிகப் புனிதமான சிவராத்திரி விரதத்தை திருக்கேதீச்சர ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்போது மன்னாரிலேயே அமைந்துள்ள மூன்று இந்து ஆலயங்களின் தெய்வ விக்கிரகங்களை விஷமிகள் திட்டமிட்டுச் சேதப்படுத்தியுள்ள செயலானது மிகவும் கண்டனத்துக்குரியது. இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதும் தெய்வ விக்கிரகங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட மனிதத் தன்மையற்ற-திட்டமிட்ட சேதப்படுத்தலானது மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்துக்களையும் இலங்கைவாழ் இந்துக்களையும் மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் இந்துக்கள் மீதான அடக்குமுறை ஏதோ ஒருபின்புலத் திட்டமிடலுடன் செயற்படுத்தப்படுகின்றமையானது இத் தாக்குதல்களினூடாக தெளிவாக புலப்படுகின்றது. அவ்வாறான நீண்டகால திட்டமிடல்களினூடாக அவ்வப் பிரதேசங்களில் வாழும் இந்துக்களின் இயல்பான வாழ்க்கையை முடக்கி அவர்களுக்கு இந்நாட்டின் அரசியலமைப்பினூடாக கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமையை அச்சுறுத்தி, அவர்களை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ள முயல்கின்றமையும் அவ்வப் பிரதேசங்களை பிறமதத்தினர் தமது மறைமுகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முற்படுகின்றமையும் இவ்வாறான தாக்குதல் செயற்பாடுகளினூடாக மக்கள் ஆலயங்களை நாடிச்செல்லும் தன்மையினை குறைத்து அல்லது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி அவர்களை தமது மத அனுட்டானங்களிலிருந்து வலக்கி வைக்க முயல்கின்றமையையும் தெளிவாக கண்டு கொள்ள முடிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளினால் நீண்டகாலம் இந்து மக்கள் இந்நாட்டில் வாழ்வதில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்த முயல்வதையும் நாம் உணர்ந்து சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

இவ்வாறாக தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்துதல் போன்ற அதர்மமான செயற்பாடுகளால் இந்நாட்டில மேலும் மேலும் அழிவுகளும் இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும் என்பது இயற்கையின் வழிப்பட்டு அநாதியாய் தோன்றிய இந்துமதம் உணர்த்தி நிற்கும் யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

எவரொருவர் அடாத்தாக மற்றொருவர் அல்லது அவரது மத நம்பிக்கை மீது அதர்மமான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை அல்லது சேதப்படுத்தலை செய்கின்றாரோ அவர் அல்லது அந்த சமூகம் தர்மத்தின் தீர்ப்புக்கு உட்பட்ட சொல்லொணாத் துயரங்களையும் அழிவையும்கூட எதிர்கொள்ளும் என்பதை தொன்மையான இந்துமத புராணங்களும் இதிகாசங்களும் உணர்த்தி வருகின்றன. அதை நாம் கடந்தகால நிகழ்வுகளினூடாக நேரிலும் கண்டிருக்கின்றோம். இவ்வாறான தொடர் செயற்பாடுகள்வளமான இலங்கையின் எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே இவ்வாறான மிலேச்சத்தனமான சேதப்படுத்தல்களை மேற்கொள்பவர்கள் தமது தீய நோக்கத்தை கைவிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை கைவிடவேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறி வைக்க விரும்புகின்றோம்.

அரசாங்கமும் நாட்டின் பாதுகாப்புத்துறையும் குறிப்பாக மன்னார் மாவட்ட பொலிஸாரும் இது தொடர்பான நீதியானதொரு விசாரணையை முன்னெடுத்து தவறு செய்தவர்களை நீதியின்பால் பாரப்படுத்தும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம் என அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் கண்டனம் விடுத்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் மண்டான், புறாப் பொறுக்கி, அன்னா சிலையடி, டொலிகண்டி, எள்ளங்குளம், நவினர்டில், உடுப்பிட்டி, தொண்டைமானாறு, கெருடாவில், வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கம்பர்மலை, பொக்கணை, தம்பாட்டி, நாரந்தனை வடக்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில திருநகர், உண்ணாப் பிலவு, முல்லைத்தீவு நகரம் ஒரு பகுதி, கள்ளப்பாடு, வண்ணாங்குளம், கிளி நொச்சி மாவட்டச்செயலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கோவில குளம, ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங் குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், குருக்கள் புதுக்குளம், குருக்களூர், பறயனாலங்குளம் ஒரு பகுதி, பஸாா வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி, பூந்தோட்டம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும்மின்தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீங்கள் அருளாசி பெற்றவர் என்று உணருங்கள்

எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நீங்கள் அருளாசி பெற்றிருக்கிறீர்கள் என்று உணருங்கள். இந்த ஒரேயொரு அடியைத்தான் நீங்கள் எடுத்து வைக்க வேண்டும். மற்றவை எல்லாம்தானே நிகழும்.

நான் அருளாசி பெற்றிருக்கிறேன் என்ற ஆழ்ந்த உணர்வு வாழ்க்கையின் எல்லா இடர்பாடுகளையும் வெல்ல உதவும். தைரியம் மற்றும் நம்பிக்கை கொள்கிறாய், உன்மேல் இறையருள் பொழிவதற்காக மலருகிறாய்.

நான் அருளாசி பெறுகிறேன் என்று உணரும்போது

குறைகூறுவது எல்லாம் மறைகின்றன

முனகுவது எல்லாம் மறைகின்றன

பாதுகாப்பற்ற உணர்வுகள் எல்லாம் மறைகின்றன

நான் நேசிக்கப்படாதவன் என்ற உணர்வு மறைகிறது

அன்பு தேவை என்ற ஏக்கம் மறைகிறது

நீங்கள் அருளாசி பெற்றவர் என்பதைத் தெளிவாக உணராத பொழுது எல்லாவற்றையும் நான்தான் செய்கிறேன் என்ற எண்ணம் தொடங்குகிறது.

உங்களுடைய வாழ்க்கையில் ஒரு வேறுபாட்டை உண்டாக்குவதற்காக நீங்கள் அருளாசி பெற்றவர் என்று உணருங்கள். குறிப்பாக இந்த ஞானப்பாதையில் உள்ளவர்களுக்கு தாம் அருளாசி பெற்றவர் என்று உணர்வதற்கு ஒவ்வொரு நிகழ்ச்சியும் வாய்ப்பாக இருக்கிறது.

நீங்கள் அருளாசி பெற்றவர் என்பதை உணருங்கள். ஆன்மாவை (இறையை) நோக்கிச் செல்லும் பாதையில் இதுதான் முதல்படி.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபெருமானுக்கு இந்தப் பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்யுங்கள், பலன்கள் இதுதான்?

எலுமிச்சை பழம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் யமபய நாசம், நட்புடை சுற்றம் உண்டாகும்.

வாழைபபழம கொணடு சிவபெருமானுககு அபிஷேகம் செய்தால் பயிர் செழிக்கும்.

மாம்பழம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் செல்வம், வெற்றி கிடைக்கும்.

பலாப்பழம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் மங்கலம், யோகசித்தி உண்டாகும்.

மாதுளை கொணடு சிவபெருமானுககு அபிஷேகம செய்தால் பகை நீங்கி, கோபம் தவிர்க்கும்.

திருநீறு கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சகல நன்மைகளும் கிடைக்கும்.

சந்தனம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சுகம், பெருமை சேரும்.

பன்னீர் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சருமம் பாதுகாக்கும்.

நல்லெண்ணை கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நலம் உண்டாகும்.

பச்சரிசி மாவு கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் கடன் பிரச்சினை தீரும்.

மஞ்சள் தூள் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நல்ல நட்பு கிடைக்கும்.

திருமஞ்சனத் தூள் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நோய்கள் குணமாகும்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அமைதியாகப் பேசுங்கள்

- ஒருவன் தன் குழந்தைகளின் உதவிக்கோ அல்லது தனது வயோதிக பெற்றோருக்கு உதவி செய்யவோ வெளியே புறப்படுவானாயின், அவன் அல்லாஹ்வின் பாதையில் செல்கின்றான்.
- இருவருக்கிடையில் ஒருவர் சமாதானம் செய்து வைப்பது அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யும் தருமமாகும்.
- உங்களுடைய குற்றங்குறைகளைப் போக்கிக் கொள்ளாத நிலையில் மற்றவர்களுடைய குற்றங்களை குறித்துப் பேசாதரகள.
- தனது சகோதர முஸ்லிமுக்கு ஒரு முஸ்லிம் உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹ்வும் அவனுக்கு உதவி செய்து கொண்டே இருப்பான்.
- உரத்த குரலில் பேசும் மனிதனை அல்லாஹ் வெறுக்கின்றான். அமைதியாகவும், அடக்கமாகவும் பேசும் மனிதனை அல்லாஹ் நேசிக்கின்றான்.
- ஒருவனுககு எனனைத தவிர உதவி செயபவன யாருமில்லை. அப்படிப்பட்டவனுக்கு அநீதி இழைப்பவன் மீது எனக்கு கடுமையான கோபம் ஏற்படுகிறது என்று இறைவன் கூறுகின்றான்.

# ஆசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வெற்றியீட்டிய தர்சிகாவுக்கு பாராட்டு






(பனிக்கன்குளம்)

ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டியிலே வெற்றியீட்டிய முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தை சேர்ந்த பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவி தேவராசா தர்சிகா மற்றும் அவரை பயிற்றுவித்த ஆசிரியர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு செல்வபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 3.45 மணியளவில் நடைபெற்றது.

ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டியிலே 48 கிலோ எடை பிரிவிலே 90 கிலோ எடையை தூக்கி இலங்கைக்கு பெருமை சேர்த்த மாணவிக்கு கிராமத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது

செல்வபுரம் கலைமகள் விளையாட்டு கழகம் மற்றும் செல்வபுரம் கமக்கார அமைப்பு ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க .சிவநேசன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட விருந்தினர்கள் மற்றும் பாடசாலை சமூகம், கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் சாதனை மாணவி மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் முதலமைச்சரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு நினைவுக்கேடயம் மற்றும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (க-281)

# ஆண்களுக்கான கடற்கரைக் கபடி ஐக்கியம் சம்பியன்




2018 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலக கிராம சேவகர் பிரிவுகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கடற்கரை கபடி போட்டியானது கடந்த செவ்வாய்க்கிழமை மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஜே/89 மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஜே/95 அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் ஜே/89 மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 37:22 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2018 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது. (க)

## விக்ரம்–ராஜன்–கங்கு வெற்றிக்கிண்ணம்

# வெல்லப்போவது யார்? இறுதிப் போட்டி இன்று

## பல்கலை–ஓல்ட்கோல்ஸ் பலப்பரீட்சை




விக்ரம்- ராஜன்- கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் ஓல்ட் கோல்ஸ் அணி 1983 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்த கடினப் பந்து சுற்றுப் போட்டியில் முதன் முறையாக இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் அணி கே.சி.சி.சி அணியை 7 ஓட்டங்களாலும் ஜொலிஸ்ரார் அணியை 15 ஓட்டங்களாலும் யாழ். பல்கலைக்கழக அணியை 34 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. யாழ் பல்கலைக்கழக அணி ஜொலிஸ்ரார் அணியை 84 ஓட்டங்களாலும் , கே.சி.சி.சி. அணியை 153 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று, ஓல்ட் கோல்ஸ் அணியிடம் 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் மேற்படி வெற்றிக் கிண்ணத்தை கே.சி.சி.சி அணி கைப் பற்றியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

![SPORTS விளையாட்டுச் செய்திகள்]

## நல்லூர் பிரதேச செயலகத்தில் விளையாட்டுப் போட்டிகள்

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு யா/இந்துக் கல்லூரி மைதானத்தில் 10000 மீற்றர் ஓட்டத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து போட்டிகள் நடைபெறும். (க)

❖❖❖❖❖

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (க)

## சதுரங்க சுற்றுப்போட்டி

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் Majors (மேஜர்ஸ்) பிரிவு சதுரங்கப் போட்டிகள் 2018 மற்றும் பெண்களுக்கான தேசியப் பிரிவு போட்டிகள் 2018.

போட்டியானது ஏற்கனவே Novice (நொவிஸ்) போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களையும் தரப்படுத்தற் புள்ளிகளை ஏற்கனவே பெற்றிருப்பவர்களையும் உள்ளடக்கி நடத்தப்படும். பெண்கள் பிரிவில்லாது, தரப்படுத்தல் வேறுபாடின்றி யாரும் கலந்து கொள்ளலாம். போட்டிகள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். கலந்து கொள்பவர்கள் விளையாட்டு உபகரணங்கள், போட்டிக்கான கட்டணம் என்பவற்றுடன் பி.ப 3.30 க்கு முன் சமுகம் தரவேண்டும். (க)

# தொடர் காயம் இலங்கை அணியை துரத்தும் சோகம்

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான இசேல குணரத்ன பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியிலிருந்து காயம் காரணமாக விலகியுள்ளார்.

இலங்கை -பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான முதல் இருபது-20 போட்டி இன்று டாக்காவில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீர ரான அசேல குணரத்னே. தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக முதல் இருபது -20 போட்டியில் விளையாடமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பங்களாதேஷ் அணியின் நட்சத்திர வீரர்களான தமிம் இக்பால் மற்றும் முஸ்தபிர் ரஹீமிற்கும் காயம் ஏற்பட்டுள்ளதால், அவர்களும் முதல் இருபது-20 போட்டியில் விளையாடமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இலங்கை அணி வீரரான மத்யூஸ் மற்றும் பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் ஆகியோர் காயம் காரணமாக இருபது-20 போட்டியில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பெண்களுக்கான கடற்கரைக் கபடி ஐக்கியம் சம்பியன்




2018 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலக கிராம சேவகர் பிரிவுகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கடற்கரை கபடி போட்டியானது செவ்வாய்க்கிழமை மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஜே/122 உதயநிலா விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஜே/95 அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் ஜே/95 அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 27:12 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக்கொண்டது. (க)

## பாராளுமன்ற தேர்தலை...

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை வைத்து பாராளுமன்றத்தைக் கலைக்க தீர்மானிக்குமாயின் பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களாக இருப்பதற்கு கால எல்லையொன்று எதற்காகவுள்ளது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஒரு தேர்தலில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வரையில் குறித்த உறுப்பினர் பதவியில் அங்கத்துவம் வகிக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்கள் நோக்கம் தவறி செயற்படுகின்றார்கள் எனின், இன்னுமொரு பாராளுமன்றத் தேர்தலிலேயே சம்பந்தப்பட்டவர்கள் குறித்து மக்களினால் தீர்மானிக்கப்படுவார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடாத்தப்படுவதற்கு ஒரு நோக்கம் உள்ளது. குறித்த நோக்கத்தின் பேரிலேயே மக்கள் வாக்குகளை வழங்குகின்றனர். ஜனாதிபதித் தேர்தலுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும் வேறு நோக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு தேர்தல் முடிவின் போதும் பாராளுமன்றத்தைக் கலைக்கக் கோருவதாயின் பாராளுமன்றத் தேர்தல் ஒன்று எதற்கு? எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ம)

## தொழு நோயாளர்...

செய்யப்பட்டிருந்தமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஹெந்தளை-வத்தளையில் இயங்கி வரும் தொழு நோயாளர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கே இந்த அரிய வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் குறித்த அறிவிப்புகள் வெளிவந்த சில நாட்களில், உள் நோயாளர்களும் வாக்களிக்கும் வகையில் வைத்தியசாலைக்கென்று பிரத்தியேகமான வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படும் என உறுதி கூறப்பட்டிருந்தது.

தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன், வேட்பாளர் ஒருவர் வைத்தியசாலைக்கு வந்து நோயாளர்களைச் சந்தித்து அவர்களிடம் தங்களது வாக்குறுதிப் பத்திரங்களை வழங்கி தமக்கே வாக்களிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது, நோயாளர்கள் மத்தியில் பெரும் சந்தோஷத்தையும் பெருமிதத்தையும் அளித்திருக்கிறது.

தேர்தலன்று, வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் வைத்திய உத்தியோகத்தர்கள் நாற்பது பேரும் நோயாளர்கள் 29 பேரும் தமது வாக்குகளை அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி இன்று...

விடுக்கவுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் இன்று ஊடக பிரதானிகளை சந்திக்கவுள்ள நிலையில் இவ் அறிவிப்பினை வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தில் பல நெருக்கடி நிலைமைகள் எழுந்துள்ளன. தேசிய அரசாங்கத்தின் பிரதான இரண்டு கட்சிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் புரிந்துணர்வுகள் என்பவற்றின் மத்தியில் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடக பிரதானிகளை சந்திக்கின்றார். இன்று காலை 8.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறும் இந்த சந்திப்பின் போது அவர் விசேட காரணிகள் குறித்து கூறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அரசியல் நிலைமையை...

பிட்டுள்ளார்.

நாட்டில் எழுந்துள்ள தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை குறித்து தீர்மானம் எடுப்பதற்காக இந்த சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றதாக அக்கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன. (ம)

## நல்லாட்சி அரசை...

களான சேஷான் சேமசிங்க, சிசிர ஜெயக்கொடி தேனுக விதானகமகே ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

2015இல் மகிந்த ராஜபக்ஷவை அகற்றும் திட்டத்தை முன்னெடுத்தவர்கள் இப்போது கூட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் இடம்பெறும் வெளிநாட்டுத் தலையீடுகள் தீவிர கரிசனைக்குரியது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு அரசியல் குழப்பங்கள் ஆரம்பித்த பின்னர், அமெரிக்க மற்றும் இந்தியத் தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வடக்கில் 3 ஆண்டு...

ணத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஆயிரத்து 944 முறைப்பாடுகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு மனித உரிமை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு நூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போதிலும் சில முறைப்பாடுகள் உடனடியாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் 315 முறைப்பாடுகளும் கிளிநொச்சி உப அலுவலகத்தில் 93 முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 284 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் 219 முறைப்பாடுகளும் கிளிநொச்சி உப அலுவலகத்தில் 129 முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 315 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் 188 முறைப்பாடுகளும் கிளிநொச்சி உப அலுவலகத்தில் 73 முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 256 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக 2015ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 27 முறைப்பாடுகளும், பலவந்தமாக கைது செய்யப்பட்டமை தொடர்பில் 27 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பில் 22 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 85 முறைப்பாடுகளும், பலவந்தமாக கைது செய்யப்பட்டமை தொடர்பில் 52 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பில் 20 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 55 முறைப்பாடுகளும், பலவந்தமாக கைது செய்யப்பட்டமை தொடர்பில் 25 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பில் 20 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்குறித்த புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## த.தே.கூவின்...

சபைகளுக்கான தலைவர், உப தலைவர் தெரிவுக் கூட்டம் மன்னாரில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம் பெற்ற போது குறித்த கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை ஆகியவற்றிற்கான தலைவர், உப தலைவர் தெரிவுகள் இதில் இடம்பெற்றது.

குறித்த தெரிவுக்கூட்டத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர் எஸ்.சிவநேசன், மாகாணசபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குறித்த கூட்டத்தில் முன் வைத்த கருத்துகளுக்கு உறுப்பினர்கள் விசனத்தை தெரிவித்ததோடு கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் தலைவராக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஞானப்பிரகாசம் ஜெராட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும் குறித்த கூட்டத்தில் ஏனைய சபைகளுக்கான தலைவர், உப தலைவர்கள் தெரிவு செய்யப்படவில்லை.

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்ட நிலையில் மன்னார் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-281,4)

## யாழ்.மாநகர சபை...

கட்சி, ஆட்சியமைப்பதற்கு ஈபிடிபி ஆதரவு அளிக்கும் என்றும், மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஆறு மாதங்களுக்கு அளிக்கப்படும் இந்த நிபந்தனையற்ற ஆதரவு, நிர்வாகத்திறனைப் பொறுத்து நீடிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

அதேவேளை, மத்தியில் கூட்டு அரசாங்கத்துக்கு ஐ.தே.க ஆதரவு அளிப்பதால், யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஐ.தே.க ஆதரவு அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. (ம-9)

## கஞ்சா, ஹெரோயினு...

மற்றும் 10 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து பெண் ஒருவர் உட்பட 03 பேரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினைச் சோதனை செய்த போதே 4 கிலோ கேரள கஞ்சாவுடன் 10 மில்லி கிராம் ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார். (ம-15,281)

## பொறுப்புக்கூறும்...

து. நீதியமைச்சர் தலதா அதுகோரலவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கை சட்டத்தின் அடிப்படையில் இதுவரை காலமும் 8 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மீது அவர்கள் புரியும் குற்றத்துக்கான பொறுப்புக்கள் சுமத்தப்படாது.

எனினும் இது மிகக் குறைந்த வயதாக உளவியல் வைத்தியர்கள் மற்றும் அதனுடன தொடர்பான நிபுணர்களின் எண்ணமாக இருப்பதால், அதற்கான ஆகக் குறைந்த வயதெல்லையாக 12 வயது வரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 12 வயதுக்கு அதிகமான மற்றும் 14 வயதுக்கும் குறைந்த சிறுவர்களுக்கு குறித்த குற்றம் தொடர்பிலான புத்திக் கூர்மை காணப்பட்டதா என்பதை கணிப்பிடும் அதிகாரத்தை மாவட்ட நீதவான்களுக்கு வழங்கும் வகையில் இந்த சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

அதன்படி 1979-ம் ஆண்டின் 15-ம் இலக்க குற்றவியல் நடைமுறைச்சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (ம)

## வவு.நகர சபையின்...

தலைவர்கள் நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுடனான சந்திப்பின்போதே இம் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன் நிமிர்த்தம் வவுனியா நகரசபைக்கு தலைவராக முதல் இரண்டு வருடங்களுக்கு சுத்தானந்த இந்து இளைஞர் சங்கதின் தலைவராக செயற்பட்ட மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராஜாவும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு முன்னாள் விவசாய போதனாசிரியரான தர்மலிங்கம் பரதலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நகர சபையின் உபதலைவராக சந்திரகுலசிங்கம் மோகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-250,281)

## இந்திய மீனவர்...

வர்த்துறை மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களினால் 109 இந்திய மீனவர்கள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதால் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை விளக்கமறியலில் இருந்து வந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதியினர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஏனையவர்களில் 109 பேரை இன்று விடுவிக்க சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று அறிவித்தல் வழங்கியிருந்தது.

அந்த வகையில் இன்று அந்தந்த நீதிமன்றங்களினால் மீனவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (ம-9)

## தமிழ் மக்களின்...

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழர் தாயகமான வட-கிழக்குப் பகுதிகளில் போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது. எனவே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு மற்றைய கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால் ஏனைய தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து ஆட்சியமைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

குறிப்பாக காணி பிணக்குகள் உள்ள தமிழ்-முஸ்லிம் எல்லைக் கிராமங்களைக் கொண்ட பிரதேச சபைகளையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இழந்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின ஜனநாயக பண்பற்ற கடந்த கால செயற்பாடுகளே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

ஒவ்வாத கொள்கைகளைக் கொண்ட, வரலாற்று ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் தென்னிலங்கை பெரும்பான்மை கட்சிகளுடன் இணைவதானது தமிழ் மக்களின் 60 ஆண்டுகால போராட்டத்தையும் அதற்காகக் கொடுக்கப்பட்ட உயிர்த் தியாகங்களையும் அடகு வைப்பதற்கு ஒப்பானதாக அமையும். அத்துடன் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியையும் இல்லாமல் செய்து விடும்.

எனவே தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு அப்பாற்சென்று நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் இருப்பையும் தனித்துவத்தையும் அடகு வைத்து ஆட்சியமைக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்குமாக இருந்தால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதை விடப் பெரிய தோல்வியையே சந்திக்க நேரிடும். அதனைவிட இன்னும் பல தமிழ் கட்சிகளை உருவாக்கிய பெருமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம)

## ரணில் பிரதமர் பதவியிலிருந்து...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளதால் பதவி விலகவேண்டிய அவசியம் இல்லையென மகிந்த குறிப்பிட்டதாக ராஜித மேலும் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பிரதமர் பதவியிலிருந்து ரணிலை விலகுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்ததன் பின்னணியில் நேற்று ராஜித இவ்வாறு கூறியுள்ளார். (ம)


### காணி விற்பனைக்கு

யாழ். கொழும்புத்துறை வீதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட 3 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 606 8834, 076 305 3332, 077 342 9846 (C-1601)

### DMI, Jaffna

க.பொ.த (உ/த) தொழில்நுட்பவியல் பிரிவு
**G.C.E (A/L)Technology Division**

பொறியியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் செயன்முறைமைகள் தற்போது சகல வசதிகளையும் கொண்ட புதிய இடத்தில் DMI புதிய கட்டடத் தொகுதியின் இரண்டாவது மாடி (2nd Floor) வெலிங்டன் சந்தி, Jaffna.

- செயன்முறைகளிற்கு தனியான நேரசூசி
- Colombo Royal Examination Centre இன் மாதாந்தப் பரீட்சைகள் (எழுத்து + செயன்முறை)
- செயன்முறைகளை மாணவர் தனியாக செய்து பார்க்கக்கூடிய வசதி
- 2020 (A/L), 2019(A/L),2018(A/L) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- 2019 (A/L), 2018(A/L) Paper Classes தனியானநேரத்தில்நடைபெறுகின்றன.
- 2018 (A/L) மாணவர்களிற்கான தொடர்ச்சியான 5 மாதாந்த பரீட்சைகள் (3 பாடங்களும் பங்குனி மாதத்திலிருந்து ஆரம்பமாகின்றன. (எழுத்து+செயன்முறை) DMI, BEACON(Nelliady) HAC (Chavakachcheri) கல்வி நிலைய மாணவர்கள் சேர்ந்த Rank List ஆனது Z-Score இன் அடிப்படையில் ஒவ்வொரு பரீட்சையின் முடிவிலும் வெளியிடப்படும்.
- மாதாந்த மாதிரிப்பரீட்சைகள், Paper Class என்பவற்றிற்கு வெளி மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- மாறிவரும் உலகை வெற்றிகொள்ள க.பொ.த (உ/த) தொழில்நுட்பத் துறையை தேர்ந்தெடுங்கள். (C-1600)

- எமது வழமையான ஆசிரியர் குழாம் -
தொடர்புகளிற்கு :- 077 602 9235, 077 401 2800

உ
சிவமயம்

### பிள்ளையார் மெடி கிளினிக்

புனரமைக்கப்பட்ட வைத்தியசாலையின்
**திறப்பு விழா அழைப்பு**

காலம் : 17.02.2018
நேரம் : 08.30 - 9.30 (சனிக்கிழமை)
இடம் : பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. க.வி.விக்னேஸ்வரன் அவர்கள்
(கௌரவ ஓய்வுபெற்ற நீதியரசரும் வடக்கு மாகாண சபை முதலமைச்சரும்)

**சிறப்பு விருந்தினர்**
திருமதி சுபாஜினி மதியழகன் அவர்கள்
(பிரதேச செயலாளர் - வலி.கிழக்கு கோப்பாய்)

*இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பணிப்பாளர்,
பணியாளர்கள்
(C-1620)

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELs (C-1566)

### வேலைவாய்ப்பு

*புதியதோர் எதிர்காலத்தை நோக்கி..*
வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்துக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. 15பேருக்கு மட்டும்.
குறிப்பு : தங்குமிடம் and உணவு இலவசம், வயதெல்லை 18 - 40.
தொடர்பு:
077 848 5327, 021 567 9001 (C-1622)

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியில் செல்வநாயகம் ஆரம்ப பாடசாலைக்கு எதிராக 11 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
076 554 1472 (2603)

### BIO TECH - A/L - 2018
Royal Exame Center

- முன்னோடிப் பரீட்சை Part I/II, Practical Exame (B1, B2 & Sport Test)
- யாழ். கொழும்பு முன்னணி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட வினாத் தாள்கள்.
- வினாத்தாள்கள் திருத்தப்பட்டு செயன்முறை பரீட்சை புள்ளிகளுடன் வழங்கப்படும்.
- வெளிமாணவர்களும் தோற்றமுடியும்.
- பரீட்சை நிலையம்: DMI - யாழ். நகர், HAC - மீசாலை

T.P: 0774012800/ 0773119256
(Coordinator, Royal Exame Center) (C-1532)


## மரண அறிவித்தல்

### சுப்பன்செட்டியார் மாரிசெட்டியார்
(முத்துமாரி ஸ்ரோர்ஸ், ஸ்தாபகர்)



இந்தியா மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை பூர்வீகமாகவும், இலங்கை யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன்செட்டியார் மாரி செட்டியார் நேற்று முன்தினம் (14.02.2018) புதன்கிழமை மதுரை உசிலம்பட்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பன்செட்டியார் - பட்டம்மாள் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற குருசாமிசெட்டியார் - அங்கம்மாள் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சுதந்திரலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், சின்னாரக்கா அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வி.கே.இராமசாமிசெட்டியார் அவர்களின் மைத்துனரும், இராஜேந்திரன் (முத்துமாரி ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்), சுப்பிரமணியம், சுமதி, சின்னம்மாள், குமரேஸ்வரி, பிரபாகரன், வேணுகோபால் ஆகியோரின் தந்தையும், கதிரவேலு, காலஞ்சென்ற அரவிந்தன், தமிழ்ச்செல்வன், வெங்கடேஸ்வரி (இந்தியா), சரஸ்வதி (சுவிஸ்), காஞ்சனமாலா (லண்டன்), கவிதா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சீவன் (B.E - MECH), ஹரிகரன் (B.A.R.CH), பகிதாதரன் (D-ARCH), S.M.R.நிஷேக், ஹரிஸ் (BE-MECH -சுவிஸ்), சுஜித் (சுவிஸ்), துர்க்கேஸ் (சுவிஸ்), அனுஜன் (லண்டன்), கர்ணி (லண்டன்), பிரவீனா (லண்டன்), பிரியங்கா (லண்டன்), யதுசனா, சஜமுகன், காயத்திரி (தாதிய உத்தியோகத்தர், இந்தியா), தினேஸ்குமார் (விளையாட்டு ஆசிரியர், இந்தியா), வினோத்குமார், ஹரிபிரசாந் (லண்டன்), பிரியதர்சினி (விவசாயத்துறை மாணவி, இந்தியா), ரேமனா, அச்சுதன் (B.E-MECH), சிவகாமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியா மதுரை மாவட்ட உசிலம்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்ணைப்பட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மா.இராஜேந்திரன் - மகன்
(உரிமையாளர் முத்துமாரி ஸ்ரோர்ஸ்)
0094750489937, 00918122619132

37, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(1800)


### ஒடியல் கூழ்
சைவம், அசைவம்
பைறட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0352, 075 867 5800 (C-1602)

### சிங்கள வகுப்புகள்
அனுபவம் உள்ள ஆசிரியரால் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு முறையாக சிங்களம் கற்பிக்கப்படும். குழுக்களாகவோ, தனிப்படவோ கற்பிக்கப்படும். (C-1618)
தொடர்பு: 0718584886

### BSc, B.Com, BBA, B.A
(Medium Tamil)
**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L ல் முழுமை சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- இப்பட்ட நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவு முடிவுத்திகதி 15/03/2018
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
- பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழக இணைப்பாளராகிய புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

குறிப்பு. விரிவுரைகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்

யாழ். இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
021 222 8148, 077 846 9721

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-1607)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.